உ


ஓம் தத் சத்

ஸ்ரீ பரப் பிரம்மனே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனர் திருவாய் மலர்ந்தருளிய இராகத் துவேஷாதிப் பிரகரணம் என்னும்

"பேரின்பத்துக்குத் தடையும் நடையும்"

தத் துவ மஸி
அகம் பிரம்மாஸ்மி



பிரஜ்ஞானம் பிரம்மம்
அயமாத்மா பிரம்மம்


ஸ்ரீலஸ்ரீ. இராமசாமி சுவாமிகள்
(ஆனந்தாஸ்ரமத்தின் ஸ்தாபகர்)

இ:து

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் ஆனந்தாஸ்மரத்தின் முதலாவது தலைவர் ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமி அவர்களின் 11-வது ஆண்டு குரு பூஜை விழாவில், கோவிலூர் மரபு-தவத்திரு சோம கோபால சுவாமி அவர்களின் விருப்பப்படி, ஷெ ஆஸ்ரமத்தின் 2-வது தலைவர் திருவாளர். V. R. S. இராமசாமி செட்டியார் அவர்களால் இலவசமாக வெளியிடப்பட்டது.

பிரஜோற்பத்தி ௵ வைகாசி மீ 26-ம் தேதி
9-6-1991 ஞாயிற்றுக்கிழமை

கொமாரபாளையம்
ஆனந்தாஸ்ரமம்
முதலாவது தலைவர்



ஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள்

அவதாரம்: 1901 மகாசமாதி: 9-6-1980

உ

சிவமயம்

அறிவிப்பு.

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் நமது ஆனந்தாஸ்ரமத்தில், கோவிலூர் மரபு தவத்திரு- சோம கோபாலசுவாமி சுவாமி அவர்களால், தினந்தோறும் மாலை 7-00 To 8-00 மணிவரை கோவிலூர் மடம் வேதாந்த சம் பிரதாய பாடங்களான; 1 நாநா ஜீவ வாதக் கட்டளை 2. கீதாசாரத் தாலாட்டு, 3. சசிவன்ன போதம், 4. மகா ராஜாத் துறவு, 5. வைராக்கிய சதகம், 6. வைராக்கிய தீபம். 7, இலட்சணு விருத்தி, 8. வேதாந்த சூடாமணி 9. கைவல்லிய நவநீதம், 10 விவேக சூடாமணி 11 ஸ்ரீ மத் பகவற் கீதை, 12. ஸ்ரீமத் ஈஸ்வர கீதை 13. ஸ்ரீமத் பிரம்ம கீதை, 14. அஞ்ஞவதைப் பரணி, 15. ஸ்ரீ பஞ்ச தசி, ஆக 15 சாஸ்திரங்களும், 1-11-1985 முதல் 28-11-90 -ம் தேதி வரை வரிசைக் கிரமமாக நடத்தப்பட்டு முடிந்தன 29-11-1990-ம் தேதி முதல் பரமாத்வைதத்தைப் போ திக்கும் 16-ஆவது சாஸ்திரமான ''ஸ்ரீ ஞான வாசிட்டம்'' நடாத்தப்பட்டு வருகிறபடியால், ஆன்மீக நாட்டமுள்ள அனைவர்களும் இந்த அறிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, அறம், பொருள், இன்பம், வீடு, என்னும் புரு ஷார்த்த இலட்சியங்களில் முக்கிய இலட்சியமான சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்திருபப் பயனும் வீடு பேற்றை அடைந்து உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்,

இப்படிக்கு,

J. K. K. முனிராஜா.

J. K. K. முனிராஜா
M. TECH (Londan. U k.)
பெரும் தொழிலதிபர்
உப தலைவர், ஆனந்தாஸ்ரமம்
குமாரபாளையம்-638 183.

உ
ஸ்ரீ ராம ஜெயம்

முன்னுரை

நம்முடைய குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் ஆனந்தாஸ்ரமத்தின் முதல் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகளின்** 11-ம் ஆண்டு குருபூஜை நன்னாளான இன்று வண்டுக்குத் தேனென, கன்றுக்குப் பாலென ஆன்ம சாதகர்களுக்கு அரும்பயனளிக்கும் இச்சிறு நூல் வெளியிடப்படுகிறது. நம் ஆஸ்ரம நிறுவனர் **ஸ்ரீலஸ்ரீ இராமசாமி சுவாமிகள்** அருளியுள்ள அருள்மொழிகளை ஏழு சிறுநூல்களாக ஏற்கனவே வெளியிடப்பட்டு நிறைவடைந்த பின், ஞானமார்க்கத்திற்கு நேரிடையாக இட்டுச்செல்லும் இச்சிறந்த நூல் 'பேரின்பத்திற்குத் தடையும் நடையும்' என்னும் பெயரால், நமக்கெல்லாம் கிடைத்துள்ளது. ஆறு ஆண்டுகளாக ஆனந்தாஸ்ரமத்தில் தங்கி அனுகிரகித்து வரும் அருட்குருநாதர் கோவிலூர் மரபு தவத்திரு **சோம. கோபாலசாமி சுவாமிகளின்** தனிக் கருணையினால் இப் பேறு நமக்கெல்லாம் கிட்டியுள்ளது.

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச்செய்த "இராகத்து வேஷப் பிரகரணம்,' 'சாதன சதுஷ்டயப் பிரகரணம்' அஷ்டாங்கப் படிகள்'', வள்ளற் பெருமானார் மலர்ந்தருளிய "மனுமுறை கண்ட வாசகம்'' மற்றும், ஸ்ரீ குமர குருபார சுவாமிகளின் "சரசுவதி தோத்திரம்'' தூய அத்வைதக் கருத்துக்களைத் தன்னிடத்தே சிறப்பாகக் கொண்டதும் இராகம் தாளம் ஆகியவைகளுக்கு ஒத்துள்ளதுமான இரண்டு பாடல்களும் இந்நூலில் இடம் பெறுகின்றன. நாக நிகர் அல்குலே.... எனத் தொடங்கும் தீய குணங்களின் இலக்கணப்பாடல் 1—6—89 ந் தேதி 9-ம் ஆண்டு குருபூஜையின் போது வெளியிடப்பட்ட இலவச நூலில் இடம் பெற்றுள்ளது. அப் பாடலின் விளக்கமே இராகத்துவேஷப் பிரகரணம்; அத்துடன், கொள்ளத்தக்க மூன்று குணங்களும் சொல்லப்

பட்டுள்ளன. இக்கருத்துக்கள் குரு முகமாகப் போதிக்கும் போது சாதகர் உள்ளத்தில் ''ஈரக்களிமண்ணில் இரும்புக் கம்பி பாய்வது போல்'' ஆழப்பதியும்; ''இருளில் ஏற்றிய தீபம் போல்'' தெற்றென விளங்கும் இருப்பினும் அநேக ருக்கு இத்தகு வாய்ப்புக் கிட்டுவதில்லையாதலால் இவர்களும் இன்புறுமாறு இந்நூல் வடிவில் இவ்வறிய விளக்கங்கள் தரப்படுகின்றன. இவற்றை நன்கு கற்று, சிந்தித்துத் தெளி தல் இந்நூலைப் பெறுவோர் பட்ட கடமை ஆகும்.

தவத்திரு சோம. கோபாலசாமி சுவாமிகளின் வழி காட்டுதலின்படி நமது ஆனந்தாஸ்ரமம் செய்து வரும் இப் பணி மிக மகத்தானது; என்றும் நற்பயன் விளைவிப்பது. அச்சிற்கு அரிதாகி இருந்த ''அஞ்ஞவதைப் பரணி மூலமும் உரையும்'' என்னும் ஞான நூல் நமது ஆஸ்ரம சார்பில் வெளிவந்துள்ளது. மற்றும் ஞான மார்க்க நூல்களெல்லாம் இவ்வாறு வெளிப்பட்டால் நமக்கெல்லாம் நல்லாறு காட்டி நல்லன கொண்டு அல்லன தள்ளச்செய்யும். இத்தகு நூல் களைக் கண்ட ஆன்ம நேயர் உள்ளம்; காலை வந்த கமல மலர் போலும், மாலை வந்த மந்தாரை மலர் போலும், மாலை கொண்ட மணமகள் போலும், சோலை வந்த பாலைப் பயணி போலும், உவக்கும், செம்மைசால் இப்பணியை என்ஞான்றும் செய்தவமெனக் கொண்டு ஆற்ற வேண்டு மெனத் தவத்திரு சுவாமிகளையும், ஆஸ்ரம தலைவரும் என் தந்தையாருமாகிய உயர்திரு V. R. S. இராமசாமி செட்டி யார் அவர்களையும் அனைவரின் சார்பிலும் வணங்கி வேண் டுகிறேன்.

9—6—91 -ஆம் இந்நாள், நமக்கெல்லாம் சாந்தி தரும் நன்னாள். சென்ற வருடம் இத்தகைய நாளில் நெரூர் ஸ்ரீ கைலாஸ ஆஸ்ரம குரு முதல்வர் தவத்திரு தேஜோமயா னந்த சுவாமிகள் அவர்களும், நம் ஆனந்தாஸ்ரம உதவித் தலைவர் உயர்திரு J. K. K. முனிராஜா அவர்களும், உடல் நலம் குன்றியிருக்க, இவர்கள் பூரண நலம் பெற நாமெல் லாம் இறைவனை இறைஞ்சினோம்; தனிப்பெருங்கருணை

ஆண்டவரும் இன்று அவ்வாறே அருளியுள்ளார். ஒரு மாதத்திற்கு முன்பு நமது குமாரபாளையம் வேதாந்த மடத்தின் ''புனருத்தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேகமும்'' கோவிலூர் மரபு தவத்திரு மஹா கோவிந்தசாமி சுவாமிகளின் அருளாசியினுல் செவ்வனே நடந்தேறியது. ஆறும் ஆண்டாக ஸ்ரீ சங்கர ஜயந்தி விழா இவ்வருடம் ஆனந்தாஸ்ரமத்தில் பக்திப் பரவசமுடன் அன்பர்களால் கொண்டாடப்பட்டது. பள்ளி மாணுக்கரின் ''இந்துமத ஆன்மீகப் பயிற்சி முகாமும்'' வரும் ஜூன் மாதம் 14, 15, & 16ந் தேதிகளில் ஆறுவது தடவையாகக் கருத்துடன் நடத்தப் பெற உள்ளது குரு நாதர்களின் சங்கல்பத்திஞல் இறைவனின் திருக்கருணை நம் அனைவர் மீதும் தொடர்ந்து காட்டப்பட்டு வருவதின் அறிகுறிகளே இத்திருநிகழ்ச்சிகளாகும்.

ஆஸ்ரம கமிட்டி உறுப்பினர்களும், ஏனைய அன்பர்களும், தாய்மார்களும் மென்மேலும் ஆஸ்ரமப் பணிகளில் ஈடுபட்டு நலம் பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கிறேன்,

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

1—6—91
கொமாரபாளையம்
சேலம் மாவட்டம்

R. S. இராஜு B E.,
உரிமையாளர்
ஸ்ரீ ஆண்டாள் & கோ

எண்ணிலாக் கல்வி யாலும் இலக்கிய கேள்வி யாலுந்
திண்ணிதா மதியி ஞலுந் தெளியவா ராது தீரம்
நண்ணிய ஞானி தானே நயந்தருள் செய்யில் ஞானக்
கண்ணிஞற் காண லாகுங் கரத்திலா மலகம் போல

பிரம்ம கீதை 7—39

உ சிவமயம்

ஓம் தத் சத் பரப் பிரம்மனே நம:

ஸ்ரீ ஞான கணபதி தோத்திரம்

மோகமெனும் கடல்கடந்து முத்தியெனுங் கரைகாண்பான்
முதிர்ந்த நாலாம்,
பாகமெனும் மலர்கொண்டு பக்தியெனும் புனலாட்டிப்
பரிந்து சாத்திச்,
சோகமெனப் பாவித்துத் துரியமெனும் விளக்கேற்றிச்
சோகம் நீங்கி,
ஆகமெனுங் கோயிலின்கண் அறிவென்னுங் கணபதிக்கே
அன்பு செய்வாம்.

ஸ்ரீ சற்குரு ஸ்தோத்திரங்கள்

ஸ்ரீ தட்சணா மூர்த்தி

சீர்பூத்த மௌனமதாய் அருமறைகண் மாமுடிகள்
திகழ்த்துபரப் பிரமதத்துவனை யணியவ்வனனை
நேர்பூத்தவுயர் சீடவிருடி கணப்பிரம நிட்டர்கள்
சூழ்தர நிறைமாமதியினைச் செங்கழுநீர்த்
தார்பூத்தகுரு பரனைச்சின் முத்திரிக்கை தரித்தவனை
ஆனந்த மூர்த்தியை தன்மயனை
ஏர்பூத்த முதிதவதன்னை எந்த ஞான்றும் எழிலுறு
சீர்த்தட்சிணா மூர்த்திமை ஏத்தெடுப்பாம்

ஸ்ரீ வியாச பகவான்

வேத நான்கினுட் பொருளினை மறைத்தவெந் தமக்குப்
போத பானுபாவாய்ப் புனிதநல் லருளுருப் புனைந்து
சேது வாம்பர சுகத்தினைத் திகழ்தர விளக்கும்
வாத ராயணன் மலரடி முடிமிசை வைப்பாம்.

ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியார்

பெண்மைபாதிய னென்பெயர் பெயர்க்கவோ விடத்தை
யுண்மையார்கள் என்பதை யொழிக்கவோ உலகில்
வெண்மைமாமலை விட்டொரு விரத்தனுய்ப் போந்தே
தண்மையேதரு சங்கர முனிவரைப் பணிவாம்.

கோவிலூர் ஸ்ரீ சோம சுந்தர ஞான தேசிக சுவாமிகள்

துறவுபெற்ற நற்றவர்கள் தினங்க டோறும்,
துணிவொடுநல் ஞானசாத்தி ரங்கள் கேட்டல்
மறவியுற்றும் விடாதியற்றின் அதன்ப லத்தால்,
மாறுதலில் அகம்பிரமமாம் எனும்வி ருத்தி
பெறவுமிங் கதுகொண்டா வரணம் ஒழிப்பார்,
பெற்றவிதல்லாதவரைப் பேச லாமோ
துறவரென்றிங் கெனக்கோதி ஒடுக்கம் பெற்றீர்,
தூயவரேசோமசுந்த ரமாமெங் குருவே.

ஓம் தத் ஸத் பரப் பிரஹ்மணே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனார் அருளிச் செய்த

முதலாவது

இராகத் துவேஷப் பிரகரணம்.

(பேரின்பத்துக்குத் தடைகள்)

குருஸ்துதி

ப்ரஹ்மாநந்தம் பரமஸுகதம் கேவலம் ஜ்ஞானமூர்த்திம்
விஸ்வாதீதம் ககநஸத்ருஸம் தத்வமஸ்யாதி லக்ஷ்யம்
ஏகம்நித்யம் விமலமசலம் ஸர்வதாஸாக்ஷி பூதம்
பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸத்குரும்தம் நமாமி. [1]

(இதனது பொருள்)

பிரஹ்மானந்த ஸ்வரூபமாகியும், சிரேஷ்டமான சுகத்தைக் கொடுப்பதாகியும், நிர்விகாரமாகியும், ஞானவடிவமாகியும், பிரபஞ்சாதீமாகியும், ஆகாயத்துக்குச் சமானமாகியும், மஹா வாக்கியங்களுக்கு இலட்சியார்த்தமாகியும் ஒன்றாகியும், நித்தியமாகியும், நின்மலமாகியும், அசைவற்றதாகியும், எப்போதுஞ் சாட்சி மாத்திரமாகியும், பாவனைகளுக்கு அப்பாற்பட்டதாகியும், முக்குணங்களுமில்லாததாகியுமிருக்கின்ற சற்குருவை நமஸ்காரம் பண்ணுகின்றேன்.

(இதுவுமது)

மூகாம்பிகாகடாக்ஷாந் மோஹவிஹீநம் கரோதிஸிஷ்யம்ய:
ஏகாத்மகம்ஸேஷகிரீஸ மஸேஷவேதாந்த தேசிகம்வந்தே [2]

(இதனது பொருள்)

மூகாம்பாளது கடாக்ஷத்தினாலே சீடனை மோகத்தினின்றும் விடுவித்தவராகியும், ஏகஸ்வரூபராகியும், சமஸ்தமான

இராகத் துவேஷப் பிரகரணம்

உபநிடதங்களுக்கு ஆசிரியராகியும் இருக்கின்ற சேஷகிரீச ரென்னும் நாமதேயத்தையுடைய ஆசாரியரை நமஸ்காரம் பண்ணுகின்றேன்.

(சுலோகம்)

காமத்யா: ஷோடஸகுணு ஹையோபா தேயதாம்கதா:
தேஷாம்ஸ்வரூபம் ப்ரதமம் தாவத்தத்ர நிரூப்யதே. [3]

(இதனது பொருள்)

காமமுதற் பதினறு குணங்களில் இராகமுதற் பதின் மூன்றுந் தள்ளத்தக்கனவும், இச்சைமுதல் மூன்றுங் கொள் ளத்தக்கனவுமாம். அவைகளின் ஸ்வரூபம் நிரூபிக்கப்படு கின்றது. இராகத்தி னம்சமே காமமாதலாற் காமாதியெனக் கூறினர், இப்பதின்மூன்றும் இராகத்துவேஷங்களின் பரியாய மெனக் கொள்க.

எந்த இராகத் துவேஷங்களினல் திரிவித கரணங்களுந் திரிவிதகன்மங்களைச் செய்கின்றதோ, அந்த இராகத்துவேஷ ங்களின் குணங்களை நிரூபிக்கிறோம். அவையாவன:- இராகம் துவேஷம், காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மச்சரம், ஈரிஷை, அசூயை, இடம்பம், தர்ப்பம், அகங்கார மெனப் பதின்மூன்றும், இப்பதின்மூன்றும் மோக்ஷமடைவ தற்கு விக்கினமாயிருக்கின்றபடியால் இவற்றை முமுக்ஷு வானவர்கள் காலத்திரயத்திலும் பரிசியாமற் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம். இவைகளின் விபரம் வருமாறு:-

1. க. இராகம்.

பரஸ்திரீகமனம் பண்ணவேண்டுமென்று விகற்பித்துவரு கிறசித்தவிருத்திக்கு இராகமென்று பெயர். இதை முமுக்ஷு வானவர்கள் காலத் திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் இராவணனு னவன் பரதாரமான சீதையம்மனை யிச்சித்த இராகத்தினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இக பரங்களிலபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்கள னுபவித்ததும், இன்னுஞ் சகோரதரான சுந்தோபசுந்ததாளி ருவருந்திலோத்தமையைக் கண்டு உன்பாரி என்பாரியென்ற டித்துக் கொண்டிறந்ததும், இன்னுமநேகம் பேரிந்த இராகத் தினுற்துக்க மனுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டி ருக்கிறோ மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த இராகத்தினுலநேக துக்க மனுபவிக்கின்றதைப் பிரத்தி யக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போ கிற பேர்களிடத்திலுமிந்த இராகமிருந்தாற்றுக்கமே யனுப விப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இதற்கு எதிரி யான "பிறனில் விழையாமை" குணத்தைச் சம்பாதித்து க்குகொண்டு இந்த இராகத்தை முமூக்ஷுவானவர்கள் சர் வாத்மனு விட்டு விடவேண்டியது சித்தம்.

2. துவேஷம்.

இப்படியே தனக்கொருவ னபகாரம் பண்ணினு லவனுக் குப் பதிலபகாரம் பண்ணவேண்டுமென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குத் துவேஷமென்று பெயர். இதை முமூக்ஷு வானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் இரணிய கசிபனுனவன் தன்றமையனைக் கொன்ற நாராயணனைக் கொ ல்லவேண்டுமென்ற துவேஷத்தினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்கள் அநுபவித்ததும், இன் னுமநேகம் பேரிந்தத் துவேஷத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினு லும், இப்போ திருக்கிறபேர்களு மிந்தத் துவேஷத்தினு லநேக துக்க மநுப விக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக்கண்டிருக்கிறபடியினுலும்,

இராகத் துவேஷப் பிரகரணம்.

இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தத் துவேஷமிருந் தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினு லும் இதற்கு எதிரிகுணமான "உதாசீனம்" சம்பாதித்துக் கொண்டு இந்தத்துவேஷத்தை முமூக்ஷுவானவர்கள் சர்வாத் மன விட்டுவிட வேண்டியது சித்தம்.

3. காமம்.

இப்படியே புத்திர மித்திர களத்திர கிரகக் கிராம க்ஷேத் திர தனதான்யாதிகண் மேன்மேலுஞ் சம்பாதிக்க வேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குக் காமமென்று பெயர். இதைமுமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில் லாமற் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் நரகாசுரனு னவன் இலட்சம் ஸ்திரீகளைக் கலியாணஞ் செய்வதற் காசித் துத் தேவஸ்திரீகள் பதினுயிரம் பேர்களைச் சிறைபிடித்து வந்ததைக்கேட்ட ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாலவன் பிராண ஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லப கீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்கள நுபவித்ததும் இன்னு மநேகம் பேரிந்தக் காமத்தினுற் றுக்க மநுபவிக்கின் றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்தக் காமமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இதற்கு எதிரி குணமான "கிடைத்ததில் திருப்தி" சாம்பாதித்துக் கொண்டு இந்தக் காமத்தை முமூக்ஷுவானவர்கள் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது சித்தம்.

4. குரோதம்.

இப்படியே தனக்கு வேண்டிய காரியங்களி லொருவன்

விக்கினம் பண்ணின லவனிடத்தி லாக்கிரகமாக விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்குக் குரோதமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டிய தென்றால், பூருவத்தில் பகாசுரனானவன் றனது புசிப்பிற்கு விக்கினஞ்செய்த வீமராஜன்பேரிற் குரோதம் வைத்ததனாலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்தும், இன்னு மநேகம் பேரிந்தக் குரோதத்தினாற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்தக் குரோதத்தினாலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப்பிறக்கப் போகிற பேர்களிடத்திலு மிந்தக் குரோ-தமிருந்தாற்றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினாலும் இதற்கு "எதிரி குணமான" சகிப்புத்தன்மை [பொறுமை] சம்பாதித்துக் கொண்டு இந்தக் குரோதத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிட வேண்டியது சித்தம்.

5· உலோபம்.

இப்படியே தான் சாம்பாதித்த பதார்த்தங்களில் நியாயமாகக் கொடுக்கவேண்டியவர்களுக்கு மொருகாசளவுஞ் செலவுபண்ணலாகாதென்று விகற்பித்து வருகிற சித்தவிருத்திக்கு உலோபமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனா விட்டு விடவேண்டியது

ஏன் விடவேண்டியதென்றால், பூருவத்தில் துரியோதனனானவன் சூதாடிக் கெலித்த பாண்டவர்களுடைய இராஜ்ஜியத்தி லவர்கள் வசிக்கக்கூட இடங்கொடுக்க மாட்டேனென்ற உலோபத்தினாலவன் பிராணஹானி, பந்துநாசம் இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான

இராகத் துவேஷப் பிரகரணம்.

அநேக வநர்த்தங்கள நுபவித்ததும், இன்னு மநேகம் பேரிந்த உலோபத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறீருமானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த உலோபத்தினுலநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்தியமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த உலோப மிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இந்த உலோபத்தை முமூக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

6. மோகம்.

இப்படியே தான் சம்பாதித்த பாதர்த்தத்தின் பேரிற் பிரியம்மோதப் பிரமோதமாய் விகற்பித்துவருகிற சித்த விருத்திக்கு மோகமென்று பெயர். இதை முமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றுல், பூருவத்தில் தசரதமஹாராஜனுனவன் தனது ஜேஷ்ட புத்திரனுன ஸ்ரீ ராமன் பேரில் வைத்த மோகத்தினு லவர் மாதுருவாக்கிய பரிபாலன் நிமித்தங் காட்டுக்குப் போக வதனுலவன் பிராணஹாணி, பந்து நாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்தும், இன்னுமநேகம் பேரிந்த மோகத்தினுலநேக துக்கமநுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த மோக மிருந்தாற் றுக்கமே யனுபவிப்பார்களென்று தோற்றுகிற படியினுலும் இதற்கு எதிரி குணமான ''ஊழ் ஆராய்சி'' சம்பாதிதுக்கொண்டு இந்த மோகத்தை முமூக்ஷுவானர்கள் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது சித்தம்.

7 மதம்.

இப்படியே ஐஸ்வரிய பாகுள்யத்தினுற் கொர்வித்துக்கிருத்

இராகத் துவேஷப் பிரகரணம்

தியகிருத்தியந் தெரியாமல் விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு மதமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றுல், பூருவத்தில் கார்த்தவீரியார்ச்சுனனுனவன் றன்னிடத்தில்வந்த மகரிஷியான நாரதரை மதித்து உபசாரம் பண்ணுமற் கெர்வித்திருந்ததைக் கேட்ட பரசுராமனுலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியானி, இக பரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேகவநர்த்தங்களநுபவித்ததும், இன்னு மநேகம் பேரிந்த மதத்திஞற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறேமானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த மதத்திஞல் அநேக துக்கம் அநுபவிக்கின்றதைப் பிரத்திக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப்பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த மதமிருந்தாற் றுக்கமே யநுவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும், இதற்கு எதிரி குணமான வேதத்தில் கூறியுள்ள "விதிவிலக்கு ஆராய்ச்சி" யைச் சம்பாதித்துக் கொண்டு இந்த மதத்தை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டு விடவேண்டியது சித்தம்.

8. மச்சரம் (பொருமை)

இப்படியே, ஒருத்தர் சுகமாயிருந்தா லவர்களைப் பார்த்துச் சகிக்காமல் விகற்பித்துவருகிற சித்த விருத்திக்கு மச்சரமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றுல், பூருவத்தில் சிசுபாலனுனவன் தருமராஜன் இராஜசூய யாகத்திலக்கிர தாம்பூலம் வாங்கத் தக்கவராரென்று விசாரித்தது ஸ்ரீ கிருஷ்ணசுவாமிக்குக் கொடுத்ததைச் சகிக்காமல் மச்சரப்பட்டத்திஞலவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்யஹானி, இகபரங்களிலபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க நுளபவித்தும், இன்னுமநேகம் பேரிந்த மச்சரத்திஞற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறேமானபடியினுலும்,

இராகத் துவேஷப் பிரகரணம்

இப்போதிருக்கிற பேர்களுமிந்த மச்சரத்தினு லநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்திக்ஷயமாகக் கண்டிருக்கிறபடியி னுலும், இனிப் பிறக்கப் போகிற பேர்களிடத்திலு மிந்த மச்சரமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்று கிறபடியினுலும், இதற்கு எதிரி குணமான அழுக்காருமை யைசம்பாதித்துக் கொண்டு இந்த மச்சரத்தை முமுக்ஷு வானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

9. ஈரிஷை

இப்படியே, தனக்குவந்த துக்கம் பிரத்தியாருக்கு வரலா காதா வென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு ஈரிஷை யென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத் திலுமில்லாமற் சமர்வாத்மனு விட்டுவிட வேண்டியது.

ஏன் விடவேண்டியது என்றுல், பூருவத்தில் அருஞுக்ஷத ஞனவன் தனக்கு வந்த துக்கந் தனதிஷ்டஞன வாஞசுர னுக்கு வரலாகாதாவென்று எதிர்த்த வீரிஷையினு லவன் பிராணஹானி, பந்துநாசம், இராஜஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்த துப், இன்னும் அநேகம் பேரிந்த வீரிஷையினுற் றுக்க மநுபவி த்துஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறே மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்த வீரிஷையினு லநேக துக்க மநுபவிக்கினறதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியி னுலும், இனிப் பிறக்கபோகிற பேர்களிடத்திலு மிந்த வீரி ஷையிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகி றபடியினுலுப், இதற்கு எதிரி குணமான அன்பு சம்பாதித்து க்கொண்டு இந்த வீரிஷையை முமுக்ஷுவானவர்கள் சர்வா த்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

10. அசூயை.

இப்படியே, தனக்கு வந்த சுகம் பராளுக்கு வரலாமா வென்று விகற்பித்து வருகிற சித்த விருத்திக்கு அசூயை யென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்

திலு மில்லாமற் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது.

ஏன் விடவேண்டியயதென்ருல், பூருவத்தில் பௌண்ட ரீக வாசுதேவனுவவன் தனக்கும் வாசுதேவன், கிருஷ்ண னுக்கும் வாசுதேவனென்று பெயராவென்கிற வசூயையினு லவனேடெதிர்த்து அவன் பிராணஹானி, பந்துநாசம்,இரா ஜ்ஜியஹானி, இகபரங்களு லபகீர்த்தி யிவைமுதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும் இன்னு மநேகம் பேரிந்த வசூயையினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டி ருக்கிறே மானபடியினுலும் இப்போதிருக்கிற பேர்களு மிந்த வசூயையினு லநேக துக்க மறுபவிக்கின்றதைப் பிரத்தியக்ஷ மாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கபோகிற பேர்களிடத்திலு மிந்த வசூயையிருந்தாற் றுக்கமே யநுபவிப் பார்களென்று தோற்றுகிற படியினுலும், இதற்கு எதிரி குணமான "அருள்" சம்பாதித்துக் கொண்டு இந்த வசூயை யை முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண் டியது சித்தம்.

11. இடம்பம்.

இப்படியே, தான் பண்ணின தருமத்தை நாலுபேரும் பார்த்து பளா நன்ருயிருக்கின்றதென்று சொல்லவேண்டு மென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்கு இடபமமென்று பெயர். இதை முமுக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலு மில் லாமற் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்ருல், பூருவத்தில் நருஷுவமஹா ராஜனுனவன் தூருவாசமஹாிஷியைப் பார்த்து நான்செய்த யாகங்களைப்போல யார்செய்யப் போகிருர்கள், இது நன்ரு யிருக்கின்றதாவென்று கேட்க, யானைத் துதிக்கை போல ஆயிரம் வருஷம் நெய்சொரிந்து யாகஞ் செய்தவனு மிப்படிக் கேட்கவில்லை, ஈதென்ன இடம்ப யாகம் என்று சொன்னவ ரைக் கோபித்த அவனது யாகதோடுமவன் பிராணஹானி,

பந்துநாசம், இரர்ஜ்யஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்கள் அபவித்தும், இன்னுமநேகம் பேரிந்த இடம்பத்தினுற் றுக்க மபனுவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிருே மானபடியினுலும், இப்பேர்திருக்கிற பேர்களுமிந்த இடம்பத்தினுலநேக துக்கமபனுவிக்கின்றதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப்பிறக்கப் போகிற பேர்களிடத்திலு மிந்த இடம்பமிருந்தாற் றுக்கமே அனுபவிப்பாரென்று தோற்றுகிறபடியினுலும் இதற்கு எதிரி குணமான ''தேகம் நான்'' என்னும் புத்தி இல்லாமையைச் சம்பாதித்துக் கொண்டு இந்த இடம்பத்தை முமூட்சுவானவர்கள் சர்வாத்மான விட்டுவிட வேண்டியது சித்தம்.

12. தர்ப்பம்.

இப்பயே புத்திர மித்திர களத்திர தன தானியாதி சம்பத்துத் தனக்கே யுண்டு, தனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று விகற்பித்துவருகிற சித்தவிருத்திக்குத் தர்ப்பமென்று பெயர். இதை முமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மன விட்டுவிடவேண்டியது.

ஏன் விடவேண்டியதென்றுல் பூருவத்தில் சதகண்டராவணனுவன் ஐஸ்வரியத்திற்றனக்கொருத்தருஞ் சமானமில்லையென்று அமரர்களுக்கு உபத்திரவஞ் செய்து வந்ததை நாரதர் இராமருக்கறிவிக்க, அவர் பாரியான சீதையம்மையின் கற்பின் மகிமையால் பிராணஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி, இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்தும், இன்னு மநேகம் பேரிந்தத் தர்ப்பத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிருே மானபடியினுலும், இப்போதிருக்கிற பேர்களு மிந்தத் தர்பத்தினுல அநேக துக்க மநுபவிக்கிறதைப் பிரத்தியக்ஷமாகக் கண்டிருக்கிறபடியினுலும், இனிப் பிறக்கப் போகிற பேர்களிடத்திலு மிந்த தர்ப்பமிருந்தாற் றுக்கமே யநுபவிப்

இராகத் துவேஷப் பிரகரணம்

பார்களென்று தோற்றுகிறபடியினுலும் இதற்கு ஏதிரி குணங்களான "நிஷ்கர்ம உபாசனை" களைச் சம்பாதித்துக் கொண்டு இந்த் தர்ப்பத்தை முமூக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது கித்தம்.

13. அகங்காரம்.

இப்படியே, அடா என்னை யரியாயா! நான் பிடித்த காரியம் விடுவேனு! நீயாவெனக்குப் புத்தி சொல்கிறவனென்று விகற்பித்துவருகிற சித்த விருத்திக்கு அகங்காரமென்று பெயர். இதை முமூக்ஷுவானவர்கள் காலத்திரயத்திலுமில்லாமற் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது.

ஏன் விடவேண்டியதென்ருல், பூருவத்தில் மதுகைடவரென்பவர்கள் மகாவிஷ்ணுவோடு பதிஞயிரம் வருஷம் யுத்தம் செய்து இளையாமல் அவர் வரங்களுக்கு ஆசியாமற்ருங்களந்தவிஷ்ணுவுக்கு வரங்கொடுத்த அகங்காரத்தினுல் அவர்கள் பிரானஹானி, பந்துநாசம், இராஜ்ஜியஹானி இகபரங்களி லபகீர்த்தி யிவை முதலான அநேக வநர்த்தங்க ளநுபவித்ததும், இன்னுமேநேகம் பேரிந்த அகங்காரத்தினுற் றுக்க மநுபவித்ததுஞ் சாஸ்த்திரங்களிற் கண்டிருக்கிருே மானபடியினுலும் இப்போதிருக்கிற பேர்களும் இந்த அகங்காரத்தினுல் அநேக துக்க மநுபவிக்கின்றதைப் பிரத்திக்ஷமாகக் கண்டிருக்கிறப் படியினுலும், இனிப் பிறக்கப்போகிற பேர்களிடத்திலு மிந்த அகங்காரமிருந்தாற் றுக்கமே யநுபவிப்பார்களென்று தோற்றுகிறபடியினுலும் இதற்கு எதிரி குணமான "பணிவு" சம்பாதித்துக் கொண்டு, இந்த அகங்காரத்தை முமூக்ஷுவானவர்கள் சர்வாத்மனு விட்டு விட வேண்டியது சித்தம்.

இந்த இராகம் முதல் அகங்கார மீருன பதின்மூன்று குணங்களினுல் இராவணன் முதல் மதுகைடவர்கள் ஈருன பேர்கள் மஹாசமர்த்தர்களாயிருந்தும், அவர்கள் பிராண

இராகத் துவேஷப் பிரகரணம்

ஹானி முதலான அநேக வநர்த்தங்கள் முன்அநுபவித்ததைச் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்படியே சத்திய வர்த்தமான [நிகழ்] காலத்திலு மிந்த இராகாதிகுணங்களா லநேக ஜனங்கள் பிராணஹானிகளும், அநேக ரோகங்களும், அநேக திரவிய நாசங்களும், பந்துக்கள் விரோதங்களும், அபகீர்த்திகளும் இவை முதலான அநேக வநர்த்தங்கள் அநுபவிக்கின்றதைப் பிரத்திக்ஷமாகக் கண்டிருக்கிறோ மானபடியினாலும, இனிப் பிறக்கப்போகிற பேர்களு மிந்த இராகாதி குணங்களினின்றும் விடுபடாமற் போவார்களாகில் இப்படியே யநேக வநர்த்தங்கள் அநுபவிப்பார்ளென்று தோற்றுகிறபடியினாலும், இந்த இராகாதி குணங்களும் மோக்ஷமார்க்கத்துக்குச் சத்துருவாயிருச்சிற படியினாலும், ஜநநமரணப் பிரவாக ரூபமான நரசத்துக் கேதுவாயிருக்கிறபடியினாலும், இப்பதின் மூன்று குணங்களையும் முமுக்ஷுவானவர்கள் சர்வாத்மனா விட்டுவிட வேண்டியது சித்தம்

இவைகளா லுண்டான ஜநந மரணமே நரகமென்பதாம் இதிற்சமுசயமில்லை ஜநந மரணரூபமான தேகமே நரகமென்பதற்குப் பிரமாணம்:- எங்கே சரீரமுண்டா, அங்கே யெல்லாந் துக்கமுண்டு, எங்கே சரீரமில்லையோ அங்கேயெல்லாம் துக்கமில்லையென்று வேதத்திற் சொல்லியிருக்கிறபடியினால் இந்தச் சரீரமே சகல துக்கங்களுக்குஞ் சகலஅநர்த்தங்களுக்கும் ஏதுவாக விருப்பதினாலிந்தச் சரீரமே நரகமென்று சொன்னது சித்தம். ஆதலாலிந்தச் சரீரத்துக்கேதுவான இப்பதின் மூன்று குணங்களையும் முமுக்ஷுவானவர்கள் விட்டுவிட வேண்டியது "நல்ல குணங்களான பதின் மூன்றையும்" அவசுயம் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்பது சித்தம்.

இனிக் கொள்ளத்தக்கவைகளான இச்சை முதன்மூன்று குணங்களையும் நிரூபிக்கிறோம். அவையாவன:—

14. இச்சை.

பசி தாக நிமித்தம் அன்னபானுதிக் கிராகியமும் [கொள்ளுதலும்] மலமூத்திர விசர்ச்சனமும் [தள்ளுதலும்] பண்ண வேண்டுமென்று வருகிற சித்தவிருத்திக்கு இச்சையென்று பெயர். இவை பண்ணுமற் போனுற் றுக்கமும் பண்ணினுற் சுகமாயிருக்கும். இதனுற் பந்த மோக்ஷஞ் சுவர்க்க நரக மில்லை. யாதலாற் கொள்ளத்தக்கதாம்.

15. பக்தி.

இப்படியே மஹாதேவரிடத்திற் பிரியம் வருகிற சித்த விருத்திக்குப் பக்தி யென்று பெயர்.

16. சிரத்தை. (நம்பிக்கை)

குரு வேதாந்த சாஸ்த்திரங்களில் மிகவும் விசுவாசம் வைத்த சித்தவிருத்திக்குச் சிரத்தை யென்று யெயர். இந்தப் பக்தி சிரத்தை, முத்தியை யடைவிப்பதற் கேதுவாதலினுலும், பூருவத்திற் கட்டுவாங்கதனென்கிற மஹாராஜன் இந்தச் சிரத்தா பக்தியினுல் இரண்டு நாழிகையில் முத்தியை யடைந்தானென்று சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறு மான படியினுலும், முமுக்ஷுவானவர்கள் இந்தச் சிரத்தாபக்திகளை யவசியம் பண்ண வேண்டியது சித்தம். இராகாதி பதினுறு குணங்களும் நிரூபிக்கப்பட்டன.

இராகத் துவேஷப் பிரகரணம்

முற்றிற்று.

ஓம் தத் ஸத்

சுகமெங்கே எங்கே என்று சுற்றியே திரிந்த வென்னை
அகமுக மாக வென்றும் அகலாது கொள்வா யாகின்
மிகசுகம் எங்கே உண்டு மித்தையே மற்ற எல்லாம்
தகவுயர் வென்ற சோம சுந்தரக் குருவே போற்றி.

ஓம் தத் ஸத்

பரப் பிரஹ்மணே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனுர் அருளிச் செய்த

இரண்டாவது

விசார மார்க்கத்துக்கு உரிய

சாதன சதுஷ்டயப் பிரகரணம்.

(பேரின்பத்துக்கு நடை பாதை)

முற் பிரகரணத்திற் கற்பனு ரூபமான விஷய சுகங்களைப் பிரியமாக விசுவாசித்து அதிற் சுழலாநின்ற மநோவிருத்திக்கு [எண்ணங்களுக்கு] அவைகள் துன்பமெனத் தெரிவித்து அவ் விருத்தியை விஷய சுகங்களினின்று நீக்கி, மேல் யதார்த்த ஆத்ம சுகத்திற் பிரியம் வைக்கும்படி செய்து அதனுலுண் டான சிரத்தா பக்தியினுற் சித்த சுத்தி யுண்டாக்கி, பின்பு அவ் யதார்த்தம் வெளிபடுதற்கேதுவான சாதன சதுஷ்டயப் பிரகரணம் நிரூபிக்கிறுர்

(சுலோகம்)

சதுஷ்டயம் ஸாதநாநாம் வேதாந்தே ஷுப்ரதிஷ்டிதம்
தஸ்யஸ்வரூபம் க்ரமதஸ்தாவத் தத்ரநிரூப்பயதே. [4]

(இதனது பொருள்)

வேதாந்தத்தின் நான்கு சாதனங்கள் அதிகாரிகளுக் காகச் சொல்லியிருக்கின்றன. எந்த சாதன சதுஷ்டய சம் பத்தியினுல் யாவரும் மோக்ஷமடைவார்களோ, அந்தச் சாதன சதுஷ்டய சம்பத்தியை நிரூபிக்கிதரும்.

அவையாவன:- நித்தியா நித்திய வஸ்து விவேகம், இகா மூத் திரார்த்த பலபோக விராகம், சமாதிஷட்கம்பத்தி, முமுக்ஷுத் துவமெ நான்கு விதமாம், இவற்றில், நித்தியா நித்திய வஸ்து விவேகமெபது பிரமமே நித்திய வஸ்து, சகத்து அநித்திய வஸ்து வெனப் பகுத்தறிவதாம்.

இச்சகம் அநித்தியமென்பதெப்படியென்றால், இவை பூத பௌதிகாத்மகமானபடியினால் அநித்தியமேயாம். இங்ஙனம் பூத பௌதிகாத்மகமாகத் தோற்றபடுகிற சகத்தில் முன்னே பௌதிகங்களுக்கு அநித்தியத்துவம் நிரூபிக்கின்றோம்.

அப்பௌதிகமாவது யாதெனில்:- நால்வகைப் பிறப்பு எழு வகைத் தோற்றம், எண்பத்துநான்கு லக்ஷம் யோனி பேதங்களாயுள்ள சரீரங்களாம்.

அவற்றில் நால்வகைப் பிறப்பென்பது:- சராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உத்பிஜ்ஜமென்பனவாம். இவற்றிற் பையிற் கட்டுப்பட்டுப் பிறப்பது சராயுஜமும், முட்டையிற் கட்டுப்பட்டு பிறப்பது அண்டஜமும், வியர்வையினிடமாகப் பிறப்பது சுவேதஜமும், பூமியினிடமாகப் பிறப்பது உத்பிஜ்ஜமுமாம்.

எழுவகைத் தோற்றமென்பது — தேவரும், மானிடரும், மிருகமும், பக்ஷிகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுந், தாபரங்களுமாம்.

எண்பத்துநான்கு லக்ஷம் யோனிபேதமென்பது:- தேவ பேதம் பதினாறு லக்ஷமும், மானிடபேதமொன்பது லக்ஷமும், மிருக பேதம் பத்துலக்ஷமும், பக்ஷிபேதம் பத்து லக்ஷமும், ஊர்வன பேதம் பதினொரு லக்ஷமும், தாபர பேதம் பதினெட்டு லக்ஷமுமாம்.

இவற்றில் தேவ கந்தருவ, சித்த, சாத்திய, கின்னர, கிம்புருட, குய்யக, வித்தியாதர, யட்ச, இராக்ஷத, பூதப்பிரேத பிசாச, சாகினி, இடாகினி, வேதாள மாதியான தேவசரீரங்களும், மனு, மாந்தாதி, சக்கிரவர்த்தி, பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் முதலான நரசரீரங்களும், காமதேனு, சிம்ம, முதலான மிருக சரீரங்களும், அன்னம், கருடன் முதலான பக்ஷி, சரீரங்களும், சேடன், எறும்பு முதலிய ஊர்வன, சரீரங்களும், மகர, மச்சம், கூர்மம், முதலிய நீர்வாழ்வென சரீரங்களும், கற்பக விருக்ஷம் பாரிஜாத முதலிய தாபர

பூர்வத்தில் இத்தேவர் முதலிய எண்பத்து நான்கு லக்ஷம் யோனிபேதமா யுள்ள சரீரங்களும் நசித்துப் போனதைச் சாஸ்திரங்களிற் கண்டிருக்கிறோ மானபடியினாலும், இப்ப டியே சத்திய வர்த்தமான [நிகழ்] காலத்திலுமிருக்கின்ற மாதா பிதா முதலான சகல சரீரங்களும், நசிப்பது பிரத்திய க்ஷமாகக் கண்டிருக்கிறபடியினாலும், இனிப் பிறக்கப் போகிற சகல சரீரங்களும் இப்படியே நசிக்குமென்று தோற்றுகிறப் படியினாலு மிந்தப் பௌதிகமான பஞ்ச பூத காரியமான சகல சரீரங்களும் அநித்தியமென்பது சித்தம்.

இப்படியே பிருதிவியாதி பஞ்ச பூதங்களின் அநித்யத் துவம் நிரூபிக்கிறோம்.

அஃதெப்படியென்றால், இப்பூதங்கள் பிறந்திருக்கிறபடி யினாலும், அவயவிகளாய் இருக்கிறபடியினாலும், பிரளயகா லத்தில் நசித்துப்போகிற படியினாலும் அநித்தியமேயாம்.

அவைகள் எப்படி நசிக்றதென்றல், பிரமப் பிரளயம் வருகிற காலத்தில், பன்னிரண்டு சூரியர்களும் உதயமாய் நூறு வருஷம் மழையில்லாமலெரித்துச் சகத்தெல்லாம் பஸ் பம் பண்ணி பூமியைத் தாங்கிக் கொண்டிருந்த ஆதி சேட னுடைய மகுடங்களைப் பஸ்பம் பண்ணுகிறபோது அந்த ஆதிசேடனுடைய முகங்களிலிருந்து காளகூட விஷாக்கினி பிறந்து அந்த விஷாக்கினியுஞ் சூரியாக்கினியுங்கூடி ஆதி சேடன்முதல் துவாதச ஆதித்தாளையும் பஸ்பம் பண்ணி, அப் படிப் பஸ்பம் பண்ணின அக்கினியினின்றுஞ் சத்த [ஏழு] மகா மேகங்கள் பிறந்து நூறு வருஷம் யானைத்துதிக்கை போல வருஷதாரைக்ளை(மழைத்துளிகள்)பெய்து வருஷிக்கும். அந்த வருஷ மழை ஜலமே காரணமாக நிற்கும். அந்த ஜலத்திலப் பூமிபஸ்பம் விலயமாகும். அப்போதுந்த ஜலம் வாயுஸ்தம்ப மாக நிற்கும் அப்படி நிற்கின்ற ஜலத்தில் வடவானலம் பிறந்து ஏகார்ணவமாக ஜலமெல்லாங் கிரகிக்கும். அவ்வட வாக்கினியும்பிரசண்ட வாயுவில்இலீனமாகும். அந்தவாயுவும்

ஆகசசக்தியில்லீனமாகும். அவ்வாகசமும் அஞ்ஞானத்தில் லீனமாகும். அவ்வஞ்ஞானமும் பிரமத்தில் லீனமாகும் அப்போதப் பிரமமொன்றுமே சேஷித்துநிற்கும். ஆனபடியினுற் பஞ்சபூத பௌதிகாத்மகமான சகத்து அநித்தியமென்று சொன்னதும் இப்படி விசேஷித்து நின்ற பிரமத்துக்கு வேறே காரணமில்லாதபடியாற் பிர்மமே நித்தியமென்று சொன்னதுஞ் சித்தம்

இங்ஙனம் நித்தியா நித்தியா வஸ்துக்களில் நிச்சயந் தெரிதலாகிய முதற்சாதனங் கைவந்தாற் போதாதோ வென்ருற்போதாது. ஏன் போதாதென்ருல் சில வித்துவான்கள் சாஸ்திர பாண்டித்தியத்தினுல் ஆத்மா ஒன்றுமே நித்தியமென்றுஞ் சகத்து அநித்தியமென்றுஞ் சொல்லிக் கொண்டு, ஸ்திரி புத்திர தனதானியாதி போகங்களி லிச்சை வைத்துக் கொண்டிருக்கிறதினுல் அநித்தியமானது நித்தியமென்ற புத்தி வரும். ஆதலா லிரண்டாஞ்சாதனமான இகாமுத்திரார்த்த பலபோக விகாரமுஞ் சம்பாதிக்க வேண்டும்.

இவ் விகாமுத்திரார்த்த பலபோகவிராகமாவது இயாதென்ருல் அதையும் நிரூபிக்கின்ருேம்.

அஃதாவது: இகலோக வைராக்கியமென்றும், பரலோக வைராக்கியமென்று மிரண்டு விதமாம்,

இவற்றில் இகலோக வைராக்கியமாவது:- சிற்குச் சந்தன வநிதாதி விஷயங்களில், வாந்தா சன மூத்திரபுரீஷங்களில் எப்படியிச்சைவாராதோ, அப்படியிச்சைவராமறபோகிறது. இவ்வித வைராக்கிய மில்லாவிட்டா லிகத்திற்ருன் சம்பாதிக்கவேண்டுமென்கிற புத்திர, மித்திர களத்திர, பசு, பிரத்தியபலவத்து, கிரக, கிராம, க்ஷேத்திர, தனதானியாதிகண் முதலியவற்றைச் சாம்பாதிக்க வேண்டுமென்ருல் மிகவும் பிரயாச சாத்தியமா யிருக்கிற படியினுலும், பிரயாசைப் பட்டு எத்தனம் பண்ணினுல் அப்படி யெத்தனம் பண்ணிண பதார்த்தங்களிற் சிறிது கூடிவருகிறதுஞ்சிறிது கூடிவராம

லும் போகிறபடியினுலும், அப்படிக் கூடிவராத பதார்த்தத்தைப்பற்றி வெகுதுக்க பரம்பரைகள் வருகிறபடியினுலும், அந்தத் துக்கத்தோடு கூடிக்கொண்டிக்கிறவேளையிற் பெரியோர்களா யிருக்கப்பட்டபேர்கள் வந்தேதாகிலுஞ் சற்காரம்பண்ண வேண்டுமென்று கேட்பார்களாகில் அவர்கள் பேரில் யுக்தாயுக்தங்கள் தெரியாமற் கடினமாயிருக்கப்பட்ட சொல்லினுற் றிரஸ்காரம்பண்ணுகிறுன். அவர்களை அப்படியவர்கள் சொல்லுகின்றபோது வீட்டில் தாயார் முதலான பேர் பிரிய வசனஞ் சொல்லிப் பெரியவர்களை யப்படிச் சொல்லலாமாவென்று கூறுவார்களாகில் அவர்கள் பேரில் ஆக்கிரமாக விழுந்து யுக்தாயுக்தமில்லாத கடினமான சொல்லினுல் நிராகரிக்கிறுன். ஆனபடியினுலும், அப்படி நிராகரித்ததனுல் அநேக வநர்த்தங்களும், அநேக தோஷங்களும், வருகிறபடியினுலும், இப்படி அசாத்தியமான பதார்த்தங்களினுல் இத்தனை யநர்த்தங்கள் பிறக்குமானுல் சாத்தியமான பதார்த்தகளினுல் அனர்த்தங்கள் வருகிறதற்குச் சொல்ல வேண்டுமா?

அஃதெப்படி யென்றுல், சாத்தியமான வொரு பெண் சாதியைப்பற்றிச் சோர பயங்களும், தாயார் தகப்பனுர் விரோதங்களும், அண்ணன் தம்பி விரோதங்களும், அன்றித் தான் செய்ய வேண்டுமென்கிற நல்ல காரியங்களும் விரோதமாய்த் தன்னை யெண்ணுமல் நடக்கிற படியினுலும் துக்கமே தோற்றுகிறது, இப்படியே சாத்தியமா யிருக்கப்பட்ட தனத்தைக்குறித்துத் தயாதிகள் பயமும், இராஜ சோராக்கினி பயமும், இன்னுமவைமுதலான மகாபயதுக்கங்களுக்கு ஏதுவாயிருக்கிறபடியினுலும், இப்படியே சாத்தியமானபுத்திரனை பற்றிச் சொன்ன பேச்சுக் கேளாமற் றிரிகிறுனென்றும், புத்திசாலியாகாமற் போனுனென்றும், சதாசோகனுகக் திரிகிறுனென்றும், இவை முதலான வநேக துக்கங்கள் வருகிறபடியினுலும், இப்படியே சாத்தியா சாத்தியமாயிருக்கப்பட்டவிப் பதார்த்தங்களினுற் றுக்கமே தோற்றுகிறதானபடியினுலும், இந்த விக லோக வைராக்கியமும் அவசியஞ் சம்பாதிக்க வேண்டியது கித்தம்.

பரலோக வைராக்கியமாவதேதென்ருல்:— சுவர்க்க லோகமுதற் சத்தியலோகம் வரைக்குமுள்ள சகலலோகபோ கங்களும் வாந்தாசனமூத்திர புரீஷங்களி லெப்படி யிச்சை யில்லேயோ அப்படி யிச்சை யற்றுப் போகிறதாம்.

இப்பரலோக வைராக்கியம் பண்ணுமற் போனுற் தோச மென்னவென்ருல், இகத்தில் நகுஷமஹாராஜன் தேவேந்திர போகத்தின்பேரில் இங்சைப்பட்டுச் சோடச மகாதானங் களும் அஸ்வமேதயாகங்களுஞ் செய்து சுவர்க்கத்துக்குப் போய்த் தேவேந்திர பட்டமுங் கட்டிக் கொண்டுஇந்திராணி யோடு போகிக்கவேண்டுமென்ற அதிக பரபரப்பினுற் பல்லக் கெடுக்கிற சப்தரிஷியை அவமானம் பண்ணினன படியினுல் அவர் சபிக்க, அச்சாபத்தினுல் அவ்விந்திராணி போக முத லான சகல போகங்களும் வியர்த்தமாய்த் தான் பண்ணின எக்கிய தான பலன்களும் வியர்த்தமாய் மலைப்பாம்பாய் பூமியில் விழுந்துபோனபடியினும், இன்னுமநேகம் பேர் சுவர்க் காதி போகங்கள் வேண்டுமென்ற வாசையினுல் அநேக எக்கியங்களும் அநேக தருமங்களுஞ் செய்து அவைகள் வியர்த் தமா யநேக துக்கங்கள் அநுபவிக்கிருர்கள் ஆனபடியினுலும் அச்சுவர்க்கலோக முதற் சத்தியலோக பரியந்தமுள்ன லோ கங்களிலிருக்கிற பிரமாதி சகல தேவதைகளுஞ் சகல ரிஷி களும் ஒருத்தருக் கொருத்தர் அன்னியோன்னிய சாபத்தி னுலும், ஒருத்தர் பெண்சாதியை யொருத்தர் அபகரிக்கிற படியினுலும், இராட்சதர்கள் இராஜ்ஜியங் கட்டிக் கொண்டு போவார்களென்கிற பயத்திலுனும் ஒருத்தர் ஐஸ்வரியத்தை யொருத்தர் அபகரிக்கிறபடியினுலும் இப்படியே வைகுண் டத்திலுங் கைலாசத்திலு மிருக்கிறபேர்கள் கூட அன்னி யோன்னிய சாபங்களினுற்றுக்க ரூபமாயிருக்கிறசடியினுலும் அவ்விடம் அடைதற்கு மிகவும் பிரயாச அசாத்தியமா யிருக்கிறபடினுயிலும் அவசியமாய்ப் பரலோக வைராக்கியம் பண்ணவேண்டியது சித்தம்.

இப்படி யிகபர வைராக்கியங்களாற் சகல போகங்களை யுஞ் சுகதுக்க கன்மங்களையும் விட்டு நிராசையா யிருக்கிற விரண்டாஞ் சாதனங் கைவந்தாற் போதாதோ வெண்ணிற் போதாது, ஏன் போதாதென்றால், சில பாஷண்டர்கள் காஷாயந்தரித்துச் சன்னியாசியென்று பேரிட்டுக் கொண்டு, சம்சாரத்தையும் மோக்ஷப் பிரதானமான கன்மங்களையும் விட்டுத் தன் சரீர சவுக்கியம் பண்ணும் பொருட்டுக் குட்சி பாதை தீரச் சில வித்தைகளைக் கற்றுக்கொண்டு தான் பெரியவனென்கிற பேரினலெனக்குச் சமானமரென்று அகங்கரித்துஞ் சபித்துத் திட்டியும் இதனல் வெகுதுக்க மடைந்தவனுக முன்னுள்ள இல்லறமும் பின்னுள்ள துறவறமுன்றி உபயப் பிரஷ்டத்துவம் வருகிறபடியினல் மூன்றாஞ் சாதனமான சமாதிசட்க சம்பத்தியுஞ் சம்பாதிகக்வேண்டும்.

சமாதி சட்க சம்பத்தியாவ துஇயாதென்னில் அதையும் நிரூபிக்கின்றோம்.

அவையாவன - சமம், தமம், உபரதி, திதீட்சை, சமாதானம், சிரத்தை யென ஆறு விதமாம்.

1. இவற்றிற் சமமாவது:- மனோநிக்கிரகம், அஃதாவது, மனதைச் சலியாமல் அகத்தில் அடக்குவதாம்.

இந்த மநோநிக்கிரகஞ் செய்யமற்போனற் பூருவத்தில்அமானித்திருந்த பதார்த்தங்கள்நசித்தும் அவைகளை வாசனையால் நினைத்துக் கொண்டே யிருக்கும். அதனற் றுக்கமே யுண்டாகிற படியினலும், சத்தியவர்த்தமான காலத்திற் றன் சம்பாதித்த பதார்த்தங்களில் மிகுந்த மோகமாய் அவைகளை நினைத்துக் கொண்டே யிருக்கும். அப்போதப் பதார்த்தங்களுக்குச் சற்று விக்கினம் வந்ததாகில் அதனல் மிகவுந் துக்கமே தோற்றுகிறபடியினலும், இனி வரப்போகிற பதார்த்தங்களை வாசனையால் நினைத்துக் கொண்டே யிருக்கும். அவை வராமற்போனற் றுக்கமே விளைகிற படியி

ஞலும், இத் துக்கங்கண் மனதில் அடைத்திருக்கும்போது பெரியோர்களது வசனங்கள் பிடிபடாதபடியினுலும், இந்த மநோ நிக்கிரகம் அவசியம் பண்ண வேண்டியது சித்தம்.

2. தமமாவது: பாகியேந்திரிய நிக்கிரகம். அஃதாவது சுரோத்திராதி ஞானேந்திரிய பஞ்சகமும், வாக்காதி கன்மேந்திரிய பஞ்சகமுமாகிய விவ்விந்திரியங்களைச் செயம்பண்ணுமற்போனு லிப் பாகேந்திரியம் விஷயங்களிற்போய் விழும் அப்படியேபோய் விழுதந்தேயாகில் அதனுல் மகத்தான ஹானி வரும். அஃதெப்படி யென்ருல், சப்த விஷயத்தினுல் மானுக்கெப்படி ஹானிவந்ததோ, பரிச விஷயத்தினுல் யானைக்கெப்படி ஹானிவந்ததோ, ரூப விஷ்யத்தினுல் விட்டிற்பூச்சிக்கெப்படி ஹானிவந்ததோ, இரச விஷயத்தினுல் மீனுக்கெப்படி ஹானிவந்ததோ, கந்த விஷயத்தினுல் வண்டுக்கெப்படி ஹானிவந்ததோ, அப்படியே இந்தப் பாகியேந்திரியங்கள் விஷ்யங்களிற்சென்ருல், மகத்தான ஹானிவருமானபடியினுல் இப் பாகியேந்திரியங்கள் விஷ்யங்களிற் போய் விழாமல் அவசியம் நிக்கிரகஞ் செய்ய வேண்டியது சித்தம்.

3. உபரதியாவது:- ஈஷ்ணுத்திரயத் தியாக பூருவகமான சர்வ கர்ம சந்நியாசமாம்.

அக்கன்மமாவது:- பாவ கன்மமெனவும், புண்ணிய கன்மமெனவு மிரண்டாம். இவற்றிற் பாவ கன்மத்தினுல் நரகப் பிராப்தியுந் திரியக்காதி சரீரமும் வருகிறபடியினுலிந்தப் பாவ கன்மம் அவசியஞ் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

இப்படியே, புண்ணிய கன்மங் காமியார்த்தமாகச் செய்வானேயாகிற் சுவர்க்கலோகப் பிராப்தியும், தேவத்துவமும், மேற்கீழ் போகிறதும் வருகிறதும், ஹானிவிருத்களும், இலாப அலாபங்களுஞ் ஜநந மரணங்களும் வருகிற

படியினுல் இந்தக் காமியார்த்தமான புண்ணிய கன்மங்களை யுஞ் சர்வாத்மனு விட்டுவிட வேண்டியது சித்தம்.

இப் புண்ணியகன்மம் பகவத் பிரீதியாகப் பண்ணினுல் நிஷ்காமமாம்.

இந் நிட்காம புண்ணியத் துவாரா சித்த சுத்திவரும் இச் சித்தசுத்தித் துவாரா சற் குரு இலாபங் கிடைக்கும், இச் சற்குரு இலாத் துவாரா சிரவண முண்டாம், இச்சிரவணத் துவாரா மனனமுண்டாம், இம்மனனத் துவாரா நிதித்தியா சன முண்டாம், இந் நிதித்தியாசனத் துவாரா சமாதிஞான முண்டாம், இச்சமாதிஞானத் துவாரா மோக்ஷமடைவார் களாதலாற் புண்ணிய கன்மங்களை நிட்காமமாய் அவசியஞ் செய்ய வேண்டியது சித்தம்.

ஈஷணுத்திரயத் தியாகமாவது:- தனத்தினிடத்தும், புத் திரனிடத்துந், தாரத்தினிடத்தும் இருகின்ற இச்சையை நீக்குதலாம்.

இவ் விதமான உபரமை யவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

4. திதீக்ஷயாவது:- சுகதுக்கங்கள் வரிற் பொறுத் திருத்தலாம் அஃதாவது, தான் சம்பாதித்திருக்கிற புத்ர மித்ர களத்ராதியான சகல பதார்த்தங்களும் செவ்விதா யிருந்தாற் சுகம். அப் பதார்த்தங்களுக்கோர் விக்கினம் வந்தாற் றுக்கம் இச் சுக துக்கங்கள் இலாப அலாபங்கள், மானாவமானங்கள், செயாபசெயங்களாகிய இவை வந்த போதும் சமமாய்ச் சகித்திருத்தலும், தன்னையொருவர்வாதி க்கிற் றுன் தண்டிப்பதற்கதிகாரமிருந்துந் தண்டியாமற் பொறுத்திருத்தலுமாம்.

இத் திதீக்ஷ பண்ணமற்போனுல் இத்தொந்தங்களில் அகபட்டநேக வநர்த்தங்களும், அநேக பாபங்களும், அநேக சாஞ்சல்யங்களும், தேகசோஷணைகளும், பெரியோர்கள் சக

வாசத்துக்கு விக்கினங்களும், அவர்கள் சொல்லும் வசனங்கள் மனதிற்றரியாமற் போகிறது மிவை முதலான தோஷங்கள் அநேகமிருக்கிறபடியினுல் இப்பொறுமை ரூபமாயிருக்கப்பட்ட திதிக்ஷைஅவசியம் பண்ணவேண்டிது சித்தம்.

5 சமாதானமாவது:- ஆறு இந்திரியங்களையுஞ் சிரவணத்தில் நிருத்தல், அஃதாவது: பெரியோர்களிடத்திற் சேர்ந்து சிரவணம் பண்ணுகிற காலத்தில் மனது மிந்திரியங்களும் வாசனுவசத்திற் செல்லாமற் றிருப்பிச் சிவரணத்தின் பேரிலே ஜாக்கிரதையாக நிறுத்துதலாம். இதைப்பண்ணுமற் போனுற் பெரியோர்கள் வசனிக்கும் வசனங்கள் மனதிற் பிடிபடாமல் விஷயங்களிற் சென்றுகொண்டிருக்கும். அதனுற் பெரியோர்கள் சொன்னதிற் பயனில்லாமற் ருனினைத்திருக்கிற காரியமுமாகாமல் உபயப் பிரஷ்டத்துவம் வரும் அதனு லநேக துக்கப் பிராப்திகளுண்டாம் அதனுல் மோட்சத்துக்கு விக்கினங்கள் வருகிறபடியினுல் இந்தச் சமாதானம் அவசியம் பண்ணவேண்டியது சித்தம்.

6. சிரத்தையாவது:- பக்தி, விசுவாசமென விரண்டாம். அவையாவன:- தாய் தந்தை முதலானவர்களிடத்திலிருக்கிற பிரியங்களெல்லாஞ் சற்குரு வேதாந்தவாக்கியங்களிடத்தில் ஏகாக்கிரமாகவைப்பது விசுவாசமும், ஈஸ்வரனிடத்து ஏகாக்கிரமாக வைப்பது பக்தியுமாம்.

இவற்றில் சற்குருவினிடத்தில் மிகவும் விசுவாசம் பண்ணவேண்டியது. ஏன் பண்ண வேண்டியதென்றுல், அவர் மகிமை முன்னதாக நிரூபிக்கிறோம்.

அஃதாவது:- பிராந்தி ரகிதராயும், பரிபூரணராயும், ஞானம் பக்தி வைராக்கிய சம்பன்னராயும், நிரந்தர சந்தோஷத்தை யடைந்தவராயும், நித்திய திருப்தி யடைந்தவராயும், சச்சிதானந்தப் பிரஹ்மஸ்வரூபராயும், தேசகால வஸ்து பரிச்சேதரகிதராயும் சஜாதீய விஜாதீய, சுவகதபேத

ரகிதராயும், சட்பாவ விகார ரகிதராயும், சுத்த புத்த முத்த நித்திய பரமானந்த ஸ்வரூபராகியும், சர்வபரிபூரண கருணா சாகரராகியும், நிர்வியாச்சிய, நிர்லேப, நிர்ச்சங்க, நிர்வாண, நிட்காம, நிரூப, நிரந்தர, நிரவயய, நிர்விசேஷானந்த, நிருபத்திரவ, நிர்பந்த, நிர்வேத்திய, நிர்க்குண, நிரஞ்சன, நிச்சல, நிட்பிரபஞ்ச ஸ்வரூபராயும், அச்சேத்திய அக்கிலேத்திய, அசோஷிய, அதாகிய, அசல, அவாச்சிய, அநாமய, அக்ஷர, அப்பிரமேய, அசிந்திய, அந்நியபாகிய, அக்குரோத, அவிதர்க்கிய, அதிரிசிய, அநாசிரிய, அநாதார ஆனந்த, அகண்டாகார ஸ்வரூபராகியும், விஸ்வ தைஜஸ பிராஞ்ஞைக் கதீதமான பிரத்தியக்சைதன்னியராயும், விராட் இர்ண்ணியகர்ப்ப அவ்வியாகிருதங்களை யறிகின்ற சர்வசாக்ஷியாகியும், மூலப்பிரகிருதி அகண்டாகாரவிருத்தி ஆனந்த விருத்தி யதீதராயும், கிருத கிருத்தியராயும் விளங்குவதோடு, ஸ்வரூப ஞானமில்லாத மூடர்; மலமூத்திர பாத்திரமா யிருக்கப்பட்ட தேகமே நானென்றிந்தச் சரீரத்தைக் குறித்து வந்த ஹானி விருத்திகளும், ஜாதி, வர்ணம், குலம், கோத்திரம், ஆசிரமம், நாமம், வேஷமாதிகளும், சநந மரணங்களும் நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், சங்கற்ப விகற்பமாயிருக்கிற மனதை நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், உசுவாச நிசுவாசமாயிருக்கிற பிராணவாயுவை நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், ஆபாசமாயிருக்கிற சீவனை நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், சசவிஷாணம் போலிருக்கிற சூனியமே நானென்றுகொண்டிருக்கிறவர்களாயும், இவை முதலான அநேக மதஸ்தர்களும், திருசியங்களாய், பரிச்சின்னங்களாய்ச் சாவயவங்களாய், அநிர்த சட துக்க ரூபங்களாயுள்ள அஞ்ஞான முதலான தேகேந்திரிய பிராண புத்தியே நானென்றுகொண்டிருக்கிறவர்களாய், லோக காமியா யிருக்கப்பட்ட சீவனே நானென்றுகொண்டு கிஞ்சிஞ்ஞர்களாயுமிருக்கிறபேர்கள்கூட நிரேதுகமாய்ச் சற்குருவினுடைய வீக்ஷணத்துத்துக்குப் பாத்திர மானவர்களாகில் அவ் வீக்ஷ

ணுதிசயத்திஞற் சர்வ கன்ம விமுத்தர்களாய் அவர்களி டத்திற் சேருவார்கள். அப்படிச் சேர்ந்தவர்களுடைய பாவங்களும், ஜநந மரணரூபங்களா யிருக்கிற சகல பிராந் திகளும், சூனியம்ப ண்ணித் தங்களைப் போலக் கிருத கிருத்தி யர்களாய்ப் பண்ணுகிறவராயு மிருப்பரென்க.

சுலோகம்.

பஹவோ குரவ: ஸந்தி ஸிஷ்யவித்தாப ஹாரகா:
துர்லபோயங் குருர்தேவ ஸிஷ்யஹ்ருத்தாப ஹாரக.

இதனது பொருள்

சீடனது கைப்பொருள் பறிக்கும் படியான ஆசாரியர் வெகுபேருண்டு. அச்சீடனது மனத்தின் கண்ணுள்ள துன்பத் தைப் பரிக்கும் படியான ஆசாரியர் கிடைப்பதரிது.

இப்படிக்குச் சாஸ்திரங்களிற் பிரமாணங்க ளிருக்கிற படியினுலும், இங்ஙனங் கிடைப்பதற்கரிய சற்குருவினிடத் தில் அவசியம் மிகவும் விசுவாசம் வைக்கவேண்டியது சித்தம்

இப்படியே, வேதாந்த சாஸ்திரத்தி னிடத்திலும் அவ சியம் விசுவாசம் பண்ணவேண்டியது. ஏன் பண்ண வேண் டியதென்ருல், வேதாந்த சாஸ்திரங்களிலும் மகா மகிமை களிருக்கின்றபடியினுலேயாம் அம்மகிமை யென்னவென்ருல் அவ்வேதாந்த சாஸ்திரங்கள் சகல பிராந்திகளையுஞ் சூனி யம் பண்ணுகிறதாயும், ஜநந மரணமென்கிற சம்சார சாகரந் தாண்டுகிறதற்குத் தெப்பமாகியும், ஸ்வகர்ம குணசால மென்கிற மேகங்களைப் போக்கடிக்கிற பிரசண்ட வாயுவாகியும், ஆதியாத்மீக, ஆதிபௌதீக, ஆதிதெய் வீகமென்கிற தாபத்திரயாக்கினிகளைச் சாந்தி பண்ணுகிற அமிர்த வருஷமாகியும், புத்திர மித்திர களத்திர பசு பிரு

த்திய கிரக கிராம க்ஷேத்திர தனதானியாதிகளிடத்திற் பிரியம் மோதம் பிரமோதமாயிருக்கின்ற அஞ்ஞானமான மோகாந்தகாரத்தைப் போக்கடிக்கிற சூரியப்பிரகாசமாகியும் தானத்திரய, சங்கத்திரய, பந்தத்திரய, சீவத்திரய, சக்தித்திரய, விந்துத்திரய, தெய்வத்திரய, ஈஷணுத்திரய, கர்மத்திரய, காரணத்திரய வாசனுத்திரயமான விவ்விலங்குகளைப் பேதிக்கிற வச்சிராயுதமாகியும், இதரமான சப்த மீமாம்ச மந்திர கர்மயோக நியாயமிவை முதலான சாஸ்திரங்கள் படித்துஞ் சுக துக்க மோக கர்மபந்த சநநமரணங்களை நிரசனம் பண்ணமாட்டமற் சமுசயங்களோடு கூடி யநேக மயக்கங்களினுன் மோக்ஷமாகிற கரையைக் காணுமலு மிருக்கிற பேர்கள்கூட தெய்வாதீனமாய் வேதாந்த சாஸ்திர சிரவணம் பண்ணினுல் அது சகல சமுசயங்களையுஞ் சகல பயதுக்க மோகாதிகளையுந்தள்ளி மோக்ஷ கதியைக் காண்பிக்கிறதா யிருக்கிறபடியினுலும் இந்த வேதாந்த சாஸ்திரங்களின் பேரில் மிகவும் விசுவாசம் பண்ண வேண்டியது சித்தம்.

இப்படியே, ஈஸ்வரனிடத்திலும் அவசியம் பக்தி பண்ண வேண்டியது. ஏன் பண்ண வேண்டிய தென்ருல், சகலத்திற்கும், காரணராகியுப், பாவமும், கர்மமும், நாமமும், ரூபமும், குணங்களுமில்லாமல் உற்பத்தி, ஸ்திதி, லயம் பண்ணுகிற நிமித்தம் மாயையினுற் சீவ சகத்துக்களை விஸ்தரிக்கிறவராயும், அச்சீவ சகத்துக்களில் அனுகூதராகியும் அவ்வியாகிருத, இரணியகர்ப்ப, விராட்டு, பிர்மா, விஷ்ணு மகேஸ்வர, இராமகிருஷ்ணுதி அவதாரராயும், சத்குரு ரூபங்களாயும், இருக்கின்றபடியினுலந்த ஈஸ்வரனைக் குறித்துச் சிரத்தாபக்தியோடும் உபாசனை பண்ணினுல் அதனுல் ஈஸ்வரானுக்கிரகமுண்டாம். அவ்வனுக்கிரகத்தினுற் சகல பாவங்களும் நசித்து மோக்ஷத்தை யடைகிருர்களாதலால் ஈஸ்வரனிடத்தில் அவசியம் பக்தி பண்ணவேண்டியது சித்தம்

இப்படிக் குரு வேதாந்த வாக்கியம் ஈஸ்வரனிடத்தில் மிகவும் விசுவாசம் பண்ணுமற் போனால் ஜநந மரணப் பிரவாக ரூபமான சம்சாரதுக்கமென்கிற நரகந் தப்பாமல் வருவதோடும், அஞ்ஞானமும், அவிவேகமும், அபிமான மும் இராக கர்ம சரீரதுக்க பயாதிகளு மிவைமுதலான சகல பிராந்திகளுஞ் சூனியமாகாமலும் இருக்கின்றபடியி னால், அவசியம் சற்குரு வேதாந்தவாக்கியம் ஈஸ்வரன் இவர்களிடத்தில் மிகவுஞ் சிரத்தாபக்தி பண்ணவேண்டிது சித்தம்.

இங்ஙனம் சமதமாதி குணங்களையுடைய சமாதி சட்க சம்பத்தியான மூன்றுஞ் சாதனங் கைவந்தாற் போதாதோ வென்றாற் போதாது. ஏன் போதாதென்றால், சிலர் தாம் ஞானியெனவும், யோகியெனவும், குருக்களெனவும் பாரம் பரியமான பெரியோர்கள் வம்சத்திற் பிறந்தவரெனவுஞ் சொல்லிக்கொண்டு, முன்னுள்ள மகான்கள்பேரை வைத் துக் கொண்டு, அவர்கள் மகாமகிமையுள்ள குணதிசயங்கள் தங்களுக்கிருக்கிறதுபோலச் சமதமாதிகளை வரவழைத்துக் கொண்டு வியாஜ்மாகச் சாந்தியாதி குணங்களையடைந்து மோக்ஷமெப்போது வருமென்கிற விசாரமில்லாமற் சோ ம்பல், மயக்கம், சமுசயம் இவைகளையுடையவராய்த் தேக சௌக்கியத்துக்காக அதற்குத் தகுந்த புசிப்பின் மிகவும் விருப்பமுள்ளவராய் விசித்திரமார்க்கங்களை யப்பியாசித்துக் கொண்டு ஞானம் போல சில வார்த்தைகளைக் கற்றுக் கொண்டு ஆத்மானந்தத்தை யடையாமல் மூடசிரோம ணியா யிருப்பார்களாதலால், நான்காஞ் சாதனமான முமூக்ஷுத்துவமும் அவசியஞ் சம்பாதிக்க வேண்டியது. அஃ தாவது மோக்ஷ விருப்பமாம். அதையும் நிரூபிக்கிறோம்.

ஜநந மரணப் பிரவாக ரூபமான சமுத்திரத்திலிருக்கிற பேர்கள் தாபத் திரயங்களில் அடிபட்டு இந்தச் சம்சாரம் மகா ரௌரவாதி நரகத்தைக் காட்டிலும் அதிக துக்கமா

யிருக்கிறபடியினுல் இச்சம்சாரத்தில் க்ஷணமாத்திரமாகிலும் இருக்கலாகாதென்று மகாபயத்தை யடைந்து இப்படிப்பட்ட கோரமான சம்சாரபய துக்க மோகப் பிரமைகளைப் போக்கடித்து, நித்த சுத்த புத்த முத்த சத்திய பரமானந்த அத்துவித சுக ஸ்வரூபமாயிருக்கப்பட்ட சாம்பிராஜ்ஜியத்தை எந்தப் பெரியோர்களாலடைய லாகுமோ, அப்படிப்பட்ட சற்குரு வெங்கே இருக்கிருரோ இதற்கென்ன சாதனங்கள் வேண்டுமோவென்கிற விசாரத்தோடுந், தலையில் நெருப்புப் பற்றினவனுக்கும், நாக்கு வரண்டு போனவனுக்குந் தண்ணீரைக்கண்டாலொழிய ஒரு காரியத்திலும் மனது மீளாதது போல, எப்போது மோக்ஷம் வரப்போகிறதென்றெடுத்த விடாய் தீராமற் கிருதகிருத்தியனுமளவும் விசாரத்தினுற்றபித்துக் கொண்டிருக்கிறதே முமுக்ஷுத்துவமென்று சொல்லப்படும்.

இந்த முமுக்ஷுத்துவ மில்லாவிட்டால் ஜநநமரணமென்கிற நரகம் விடாது. பந்தமும் போகாது! ஆனபடியினுல் எவ்விதத்தினும் முமுக்ஷத்துவஞ் சம்பாதிக்க வேண்டியது சித்தம்.

இச் சாதனங்களுள்ளவனே பிரமவிசாரத்துக்கு அதிகாரியாவன். அவ்விசாரமாவது, சடம்இன்னதென்றறிந்து அதை நீக்கிச் சத்தையறிகிறதற்குச் சற்குருதரிசனமாய் அவரிடத்தில் மகாவாக்கிய உபதேசம் பெற்றுக்கொண்டு வேதாந்த மகாவாக்கியார்த்த நிச்சயமான சீவ பர வைக்கியத்தை நன்ருக விசாரித்து அவைகள் ஒன்ருன அனுபவமுண்டாக விசாரிப்பதே விசாரணையாம்.

அஃது வேண்டுமென்பதற்குத் திட்டாந்தம்' பசிக்கு அன்னம் வேண்டியவனுக்கு அதற்குச் சாதனமான இடம் விறகு, பாத்திரம், ஜலம், அரிசி இவைகளிருக்கினும் பசியைப்

போக்கடிக்கமட்டாது. இவைகளுடனே அக்கினி யொன்று கூடினலவ்வரிசியை யன்னமாகப் பாகம் பண்ணி யச்சாதன ங்களுடனே தானும் நஷ்டமாய்ச் சடாராக்கினி ரூபமாயி ருந்து கொண்டு முன் பாகம் பண்ணின வன்னத்தைப் புசி த்துப் பசி நீங்கி யச்சாடராக்கினியுந் திருப்தியாகாரமா யெப்படிச் சுகமாயிற்றோ! அப்படியே, ஆத்ம விசாரமென் னும் அக்கினி பிறந்து குருவென்கிற விடத்தில் வியாபித்து வேதாந்த சாஸ்திரமென்கிற விறகிஞற் பிரகாசித்து மானிட சன்மமென்கிற பாத்திரத்திற், சாந்த குணமென்கிற சலத் திற் சையோகமாய், அறிவென்கிற அரிசிசைப் பாகம் பண்ணி, அவ் விசாராக்கினியும் முன்னுள்ள சாதனகளோடு நஷ்டமாய்த் தான் சமைத்த பூரணமான வன்னத்தைப் புசித்து ஜநந மரணமென்கிற துக்கமான பசி நீங்கித் தனக் கெதிரி இல்லாத வத்துவிதானந்த திருப்தியையடைந்து அத் திருப்தியிஞற் சலத்திலுண்டான உப்புச்சலகாரமாவதுபோல ஞாஞந்தத்தில் உண்டான விசாரமும் ஞாஞந்தாகாரமாய் மோக்ஷமடைய வேண்டுமாதலால், அச்சாதன சதுஷ்டய முள்ளவர்க்கு இவ்விசாரம் அவசியம் பண்ண வேண்டியது சித்தம்.

சாதன சதுஷ்டயப் பிரகரணம் முற்றிற்று.

ஓம்: தத் ஸத்

ஓம் தத் ஸத்

ஸ்ரீ பரப் பிரஹ்மணே நம:

இராகாதி பதின்மூன்றிற்கும், கவி.

14 சீர் கழிநெடில் ஆசிரிய விருத்தம்

நார்கநிக ரல்குலேவி ரும்புவதி ராகமாம் நயமிலப காரந்து வேஷம், நாடுபொருள் விக்கினரைப் பகைப்பது குரோத மாம் நாஞ விதாசை காமம், மோகமது மகஞதி வஸ்து

மேற் பிரியமாம் முறையினி யாமை லோபம், மொழிமதங் கிர்த்தியா கிர்த்தியந் தெரியாமை முதன்மையா யொருவன் வாழில், வேகமா யவனையே சகியாமை மாச்சரியம் வெப்பமாந் துக்கம் வந்தால், வேறெ வருக்குவர வெண் ணுகிற தீரிஷை மேலான சுகம டைந்தாற், றுகமாய்ப் பிறருக்கு வரவொணு ததசூயை தனைமெச் சலேயிடம் பந், தர்ப்பமது பெரியவன் றுனென லகங்கரந் தன்பிடி விடாத பிடியே.

பரதாரம் விரும்பிரா கத்தினு லிராவணனைப் பல ரறிய விராமர் கொன்றூர். பாரிலப காரஞ்செய் துவே ஷங்கொ ளிரணியனைப் பன்னு நாரண ரழித்தார், சுரர் மாத நேகரைக் காமமொடு பிடிநரக சூரனைக் கிருஷ்ணர் கொன்றூர், துய்த்துணவு விக்கினவீ மன்மேற்கு ரோதபக சூரனை வீமர் கொன்றூர், கிரமமாய்த் துரியோத னன் கொடா லோபத்தாற் கீர்த்தியுறு வீமர் கொன்றூர், கெம்பீர விராமன்மேன் மோகங்கொள் தசரதர் கீழவிழுந் திறப்ப தானூர், விரிவான வைசுவரிய மதத்தினு லேகார்த்த வீரி யார்ச்சுனன் வீட்டினின், மேவிவரு நாரதர்க் குபசரி யாததான் மென்பர சுராமர் கொன்றூர்.

சிசுபாலன் மேலெனவு மச்சரங் கொண்டதாற் செருக் கற கிருஷ்ணர் கொன்றூர், சேர்ந்தநோய்ப் பிறருற வீரி ஷைகொள் ளருணுக்ஷன் சிரம்வாடுற சூரர் கொன்றூர், நசிபவண் டரிகவா சுதேவன்கொள் ளசூயையா னல்வாசு தேவர் கொன்றூர், நபூருவன் யாகமதி டம்பமொடு செய் ததான் ஞானதுரு வாசர் கொன்றூர், ஐசுவரிய மிகுதியாற் றர்ப்பங்கொள் சதகந்தரன் அழிவுறச் சீதை கொன்றூர், அகங்கரங் கொண்டமது கைடவர் கஞசமுற வளிவிஷ் ணுவே யழித்தார், விசுவாச மாகவே முக்தியை விரும்பு நன் மெய்யடிய ரென்று நீக்கி, விட்டவிப் பதின்மூன்று குற்றம தகற்று வோர் மெய்வீ டுசேர்ந் துய்வரே.

இராகாதி பதின்மூன்றிற்கும் கவி முற்றிற்று

ஓம் தத் ஸத்

உ
ஓம் தத் ஸத்

ஸ்ரீ பரப் பிரஹ்மணே நம:

ஸ்ரீ சேஷாத்திரி சிவனூர் அருளிச் செய்த
மூன்றாவது இயோக மார்க்கத்துக்கு உரிய

இயம முதலிய அஷ்டாங்கங்கள்.

இயமம், நியமம்,ஆசனம், பிராணுபாமம், பிரத்யாஹாரம் தாரணே. தியானம், சமாதி, என்னுமிவ்வெட்டும் சமாதியின் அஷ்டாங்கங்கள் எனப்படும்.

1. அற்றுள் இயமமாவது:- அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரஹ்மசர்யம், அபரிக்கிரஹம், என்னும் வேறுபட்டால் இயமம் ஐவகைப்படும். மனோவாக்குக் காயங்களாகிய மூன்றால் ஒரு பிராணியையும் துன்புறுத்தாமை அஹிம்சை. மெய்மையுரைத்தல் சத்தியம், பலவற்காரமாகவாவது சூது வாது களாலாவது பிறர் செல்வ முதலியவற்றைத் திருடாமை அஸ்தேயம். சரீரயாத்திரைக்கு உபயோகியான பொருள்களிலும் மிகுதியான பொருள்களைச் சேர்க்காமை அபரிக்கிரஹம். அஷ்டாங்க மைதுனமின்றி நிற்றல் பிரஹ்மசர்யமாம்.

அவ்வாஷ்டாங்க மைதுனங்களின் சொரூபம் சாஸ்திரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. 1. பிரேக்ஷணம், [தரிசனம்] 2. ஸ்மரணம், 3. கீர்த்தனம், 4. கேளி, 5 குஹ்யபாஷணம், 6. சங்கற்பம், 7 அத்யவசாயம், 8. கிரியாநிர்விருத்தி, என்னுமெட்டும் அஷ்டாங்க மைதுனமாம். 1. முயக்க புத்திகொண்டு சுந்தரிகளைப் பார்த்தல் பிரேக்ஷணம், (தரிசனம்) 2. போக்யபுத்தியோடு அம்மடவாரை மனத்தே நினைத்தல் ஸ்மரணம் 3 வாக்கினுல் அம்மடந்தையரின் குணங்களைக் கூறல் கீர்த்தனம். 4. அம்மாதரோடு சூதுமுதலியன விளையாடுதல் கேளி, 5 தனியிடத்தே அவ்

வரிவையருடன் பேசுதல் குஹ்ய பாஷணம். 6 அத்தெரிவையரைக் கட்டியணைக்க விச்சித்தல் சங்கற்பம். 7 அந்நாரியரைத் தழுவ நிச்சயித்தல் அத்யவசாயம் 8. அக்காரிகைகளைப் புணர்தல் கிரியாநிர்வருத்தி. இவ்வெட்டினையும் ஆய்ந்தோர் அஷ்டாங்க மைதுனமென்பர். இவ்வெட்டுவித மைதுனங்கள் நீங்கி நிற்றல் எதுவோ அது பிரஹ்மசர்யமாம் [மாணித்தன்மையாம்] அந்தப் பிரஹ்மசர்யத்தை வீட்டு வேட்கையாளர் (முமூக்ஷுக்கள்) தேடவேண்டியது இன்றியமையாமையேயாம்,

2 நியமமாவது:— சௌசம், [தூய்மை] சந்தோஷம் தவம், ஸ்வாத்யாயம், ஈசுவரப் பிரணிதானம் என்னும் வேறுபாட்டால் நியமம் ஐவகைப்படும். அவற்றுள் அகம் புறம் எனச்சௌசம் [தூய்மை] இருவிதம். மைத்திரி [நட்பு] கருணை [தயை] முதலியவற்றால் மனத்தைக் காமம் வெகுளி [கோபம்] முதலியவைகள் இலதாகச் சுத்தஞ் செய்தல் அகச் சௌசம் நீர் மண் முதலியவைகளைக் கொண்டு உடற் சுத்தி செய்தல் புறச்சௌசம். ஊழின்படி கிட்டிய மட்டிற் றிருப்தியடைவது சந்தோஷம். இதமாயும், மிதமாயும், பவித்திரமாயு முள்ள அந்நத்தை யுண்ணுதல், அல்லது வேதத்திற் சொல்லியபடி கிருச்சிர சாந்திராயண முதலிய விரதங்களால் சரீரத்தை யுலர்த்துதல், அல்லது மன இந்திரியங்களை பஜன விரோதி வியாபாரங்களினால் நிக்கிரஞ் செய்தல் தவம். பிரணவ முதலிய புநிதமான மந்திரங்களைச் ஜபித்தல், அல்லது தனது சாகையின் வேத பாகத்தைக் குருமுகமாக விதியோடு அர்த்தக் கிரகணம் வரையில் அத்தியனத்தையாவது, கீதை முதலியவற்றை யாவது நித்தியம் ஓதுதல் சுவாத்தியாயம் அநுஷ்டித்து வருகின்ற நித்திய முதலிய கர்மபலன்களைப் பரமேசுவரனிடத்துச் சமர்ப்பித்தல் ஈசுவரப் பிரணிதானமாம்.

3, ஆசனமாவது:- சுவஸ்த்திகம், கூர்மம், பத்மம், குக்குடம், உத்தானம் மயூரம், சவம், சிம்மம், பத்ரம், சித்தம், முதலிய 84. ஆசனங்களுள்ளன இவைகளில் சித்தாசனம் சிரேஷ்டமானது. அதனிலக்கணமிதுவாம்:-இடது காலே குத லிங்கங்களின் மத்தியான யோனியில் அழுத்திக்கொண்டு வலது குதிக்காலே இலிங்கத்தின் பேரிலழுத்திக் கொண்டு புருவங்களின் மத்தியில் திருஷ்டியை வைத்துக் கட்டை போல் நிமிர்ந்து சலனமின்றிச் சரீரமிருப்பது சித்தாசனமாம் இவைகளின் விரிவை ''ஹடயோகப் பிரதீபிகை'' முதலிய யோக நூல்களிற் காணலாமென வறிக. அன்றியும், எந்த ஆசனம் சுகவடிவமோ அது பிரஹ்மாசன மென்றறியத் தக்கதாம். அல்லது எவ்வாசனத்தின்கண் இடைவிடாப் பிரஹ்மசிந்தனம் சுகமாகவே யுண்டாகுமோ அது [தக்க சுக] ஆசன மென்றறியத்தக்கதாம்.

4. பிராணுயாமமாவது:- பூரகம், ரேசகம், கும்பகம் என்னும் வேறுபாட்டால் பிராணுயாமம் மூவகைப்படும். இடது நாசியால் வெளியிலுள்ள வாயுவை உள்ளே பூரித்தல் பூரகம் எனப்படும். வலது நாசியால் உள்வாயுவை வெளியே விடுதல் ரேசகம் எனப்படும். பிராணவாயுவை இருதய தேசத்தில் தடுத்தி நிருத்தல் கும்பகம் எனப்படும்.

5, பிரத்தியாகாரமாவது:- நேத்திரம் முதலிய இந்திரியங்ககளே, உருவம் முதலிய விஷயங்களினின்றும் திருப்புதல் பிரத்தியாகாரமாம்.

தாரணேயாவது:- மூலாதாரம், மணிபூரகம், சுவாதிஷ்டானம், அநாகதம், ஆக்ஞை, விசுத்தம், என்னும் ஆறு வகைப்படும், ஏதாவது ஒரு சக்கரதித்தில் சித்தத்தைப் பதிய வைத்தல் அல்லது பிரத்தியகாத்மாவின் கண் சிந்தை வைத்தல் அதாவது பிரத்தியகாத்மாவின் ஸ்மரணம் தாரணேயாம்

7. தியானமாவது:— சைதன்யவடிவ லக்ஷிய வஸ்துவின் கண் சஜாதீய விருத்திகளை மட்டும் வெள்ளமாகச் செய்தல் தியானமாம்.

8. சமாதியாவது—: எழுந்த சமஸ்காரங்களின் திரஸ்காரமும், அடங்கிய சமஸ்காரங்களின் பிரகடமுமுண்டாய் அந்தக் கரணம் ஏகாக்கிரமாய்ப் பரிணமித்தல் சமாதியெனப்படும்.

இவ் வெட்டும் அதிகாரிகளால் அடையத் தகுந்த சமாதிக்கு முக்கிய சாதனமான படியால் முமூக்ஷுக்கள் அவசியஞ் சம்பாதிக்க வேண்டியது சித்தம்.

இயம முதலிய அஷ்டாங்கங்கள்

முற்றிற்று

ஓம் தத் ஸத்.

உகந்ததே சிகனே போற்றி உண்மையை உரைக்கும் எங்கள்
மிகுந்தமுத் திராம போற்றி மிகுதுற விறையே போற்றி
தகுமணா மலையே போற்றி சார்மகா தேவ போற்றி
சுகந்தரு சோம சுந்த்ர தேசிக போற்றி போற்றி.

உ சிவமயம்

மனுமுறை கண்ட வாசகம்

(ஒரு பாவமும் அற்ற தன் மேல் பல பாவங்கள் இருப்பதாக ஏற்றிக் கூறிச் சீவர்கள் பாவங்கள் செய்யாது உய்யும் பொருட்டுக் கருணையினால்)

வடலூர், ஸ்ரீ இராமலிங்க வள்ளலார்

திருவாய் மலர்ந்தருளியது

நல்லோர் மனத்தை நடுங்கச் செய்தேனோ
நட்டாற்றில் கையை நழுவ விட்டேனோ
வலிய வழக்கிட்டு மானங் கெடுத்தேனோ
வரவு போக்கொழிய வழியடைத் தேனோ
தானங் கொடுப்போரைத் தடுத்து நின்றேனோ

தர்மம் பாராது தண்டம் செய்தேனோ
கலந்த சினேகிதரைக் கலகஞ் செய்தேனோ
களவு செய்வோருக்கு உளவு சொன்னேனோ
மனமொத்த நட்புக்கு வஞ்சகஞ் செய்தேனோ
மண்ணோரம் பேசி வாழ்வழித் தேனோ

குடிவரி உயர்த்திக் கொள்ளை கொண்டேனோ
குடிக்கின்ற நீருள்ள குளத்தைத் தூர்த்தேனோ
ஏழைகள் வயிறு எரியச் செய்தேனோ
இறப்போர்க்குப் பிச்சை இல்லையென் றேனோ
உயிர்க்கொலை செய்வோர்க்கு உபகாரஞ் செய்தேனோ

ஊன்சு வையுண்டு உடல்வளர்த் தேனோ
பொருளை இச்சித்துப் பொய்சொன் னேனோ
பொதுமண் டபத்தைப் போய்இடித் தேனோ
ஆசை காட்டி மோசம் செய்தேனோ
அன்புடை யவர்க்குத் துன்பஞ் செய்தேனோ

வேலை யிட்டுக் கூலிகுறைத் தேனோ
வெய்யிலுக் கொதுங்கும் விருட்சத்தை யழித்தேனோ
பசித்தோர் முகத்தைப் பாரா திருந்தேனோ
பகைகொண்டு அயலோர் பயிரை யழித்தேனோ
கோஒள் சோல்லிக் குடும்பங் கலைத்தேனோ

கலங்கி ஒளித்தோரைக் காட்டிக் கொடுத்தேனோ
கற்பழிந் தவளைக் கலந்திருந் தேனோ
கணவன்வழி நிற்போரைக் கற்பழித் தேனோ
காவல் கொண்டிருந்த கன்னியை யழித்தேனோ
கருப்பம் அழித்துச் களித்திருந் தேனோ

கற்றவர் தம்மைக் கடுகடுத் தேனோ
கன்றுக்குப் பாலூட்டாது கட்டிவைத் தேனோ
குருவை வணங்கக் கூசிநின் றேனோ
குருவின் காணிக்கை கொடுக்க மறந்தேனோ
பட்சியைக் கூண்டில் பதைக்க அடைத்தேனோ

பெரியோர் பாட்டில் பிழைசொன் னேனோ
கல்லும் நெல்லுங் கலந்து விற்றேனோ
தவஞ்செய் வோரைத் தாழ்வுசென் னேனோ
ஆலயக் கதவை அடைத்துவைத் தேனோ
சிவனடி யாரைச் சீறிவை தேனோ

சுத்த ஞானிகளைத் தூஷணஞ் செய்தேனோ
மாதா பிதாவை வைதுநின் றேனோ
தந்தை தாய்மொழித் தள்ளிநடந் தேனோ
தெய்வத்தை யிகழ்ந்து செருக்கடைந் தேனோ
என்ன பாவஞ்செய் தேனோ!?

அருட்பெருஞ் சோதி தனிப்பெருங் கருணை

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தின
நடுவாகி நவநிலைக்கு நண்ணு தாகி
மூதாண்ட கோடியெல்லாம் தாங்கி நின்ற
முதலாகி மனுதீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக்கு அமையா தென்றும்
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே.

உ

ஸ்ரீ குமர குருபரர் திருவாய் மலர்ந்தருளிய சகல கலாவல்லி மாலை என்னும்

சரசுவதி தோத்திரம்.

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொலோசக மேழுமளித்து
உண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாகக்கும்வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே. 2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங் கொலோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலுந்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே. 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்து
அஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவுமக மும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே. 6

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைகண்நல் காயுளங் கொண்டுதொண்டர்
தீங்குங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமும் அவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே. 8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ் ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்ன நானநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே 10

ஷே சரசுவதி தோத்திரத்தைப் பய பக்தியுடன் தினசரி பாராயணம் [படித்தல்] செய்பவர்க்குக் கல்வி விருத்தியும், உயர்ந்தோர் போற்றும் தூய நுண் அறிவும், முடிவிலாப் பேரானந்தமும் கிட்டும். இது மெய்யே இது சத்தியம்.

சுபம். சுபம். சுபம்.

இராகம்: கல்யாணி தாளம்: திருபுடை

பல்லவி

ஜீவா சிவமும்நீயே சிந்தையைவிட்டால் சின்மயவடி
வாவாயே [ஜீவா]

அநுபல்லவி

தாவுதற்கரிய தனிவஸ்து வேறில்லை தத்வமஸி யென்னும்
சாம வேதத்தின் சொல்லே. [ஜீவா]

சரணம்

1. முத்தேகமும் மித்தை அதில் உண்டான
மூன்று அவஸ்தையும் சொத்தையே
சத்துச்சித் தானந்தப்பேர் மித்தையே தானன்றி
வேறில்லை ஜெகம் வெறும் சொத்தையே, [ஜீவா]

2. காமக்குரோதம் பொல்லாதே காலத் திரையில்
காண்பான் காட்சி நில்லாதே
தாமச ராட்சத குணத்தைப் புல்லாதே
தானென்ற அகங்காரம் கெடுத்திடும் விள்ளாதே, [ஜீவா

3. அந்தக் கரண வீடே அகவிலாசம்
ஆபாச மானய கேடே
இந்திர ஜால பொறிபுலன் கூடே
என்றும் எமன்வந்து அழித்திடும் ஓடே, [ஜீவா]

4. மந்திர ஜபங்கள் வேண்டாம் மற்றுமுள்ள
மாயோக பூஜை வேண்டாம்
சிந்தனை ஒன்றின்றிச் சும்மா இருந்திடில்
திருக்கு விலாசமாய்ச் செகமெங்கும் காணலாம், [ஜீவா]

5. அறிய சற்குருவைப் புல்லு அவரருளாலே
அகம்புறப் பற்றை வெல்லு
துரியபரம் பொருள்தனிலே நில்லு சுயஞ்சோதி
தானன்றி வேறில்லை எனச்சொல்லு, [ஜீவா]

6. நிர்விகாரப் பொருளே என்போர்க்கு
நேர்ந்திடும் நித்ய அருளே
தருணம் தணிகாசலம் சாற்றிய தெருளே
சார்திடில் இருள்இல்லை ஆனந்த அருளே. [ஜீவா]

இராகம்: கர்ம்பேர்தி தாளம்: திருபுடை

பல்லவி

சற்குரு நாதா உந்தன் தத்துவ ஞானத்தால்
சித்தம் தெளிந்து யானும் சிவமானேன். [சற்]

அநுபல்லவி

நித்திய வநித்திய வஸ்த்து விவேகம் கூட்டி
சச்சிந்தானந்தம் நீயே என்க் காட்டிய [சற்]

சரணம்

1. சித்துசட பேதத்தால் சிறந்தொளிரும் ஆத்ம
வித்தை எனக்கருள் வைத்தாய்
தத்பத தொம்பத லட்சிய அசிபதத்தால்
தத்வம் கடந்துநின்ற தனிப்பொருள் நீஎன்றாய், [சற்]

2. தன்னை மறைத்திருக்கும் தனுகர ணங்களை
தானல்ல என்னும் நீதி வாக்கியத் தால்விட்டு
பரத்தை மறைத்திருக்கும் பாசாதிஉல கெல்லாம்
வெறுத்துத் தள்ளியுள்ளில் விளங்கும் உன்சொரூபம் [சற்]

3. அன்னமய கோசாதி பாசங்கள் ஐந்துந்தள்ளி
பின்னுமேது மில்லா வபின்னமான வென்னை
சின்மய வடிவமேதன் மயமாக்கி வைத்தாய்
தன்னிகரில்லா ஞானபோதம் தந்த வரதா, [சற்]

4. சொல்லுக்கும் பொருளுக்கும் எட்டாத சொரூபத்தை
சொல்லாலே சொல்லியென்னை விளங்கச் செய்தாய்
எல்லாம்கண் டறியும்உன்னை அல்லால்வே
றில்லையென்றாய்
பல்லாயிரங் கோடிநமஸ் காரம்செய் தேன்சுவாமி, [சற்]

காணுமிக் காட்சி யாவும் கற்பனை மனத்த தென்றே
பூணுதற் கென்ற ஒன்று புவனியில் காணேம் மைந்தா
காணுவான் நீயே என்றும் கலங்கமில் பிரம மென்றே
ஊணினீர் சோமசுந்தர் உள்ளத்தில் குருவே போற்றி.

☎ Offi : 3396 pp
2301
Resi : 2453

TNGST. No. 776116
CST. No. 416065/SLM/31-7-79
Post Box No 89

STD No. 04256

sree rangan engineering industry,



MANUFACTURERS OF:

- ★ **POWER LOOMS**
- ★ **DROPBOX LOOMS**
- ★ **SPINNING MACHINERY**
- ★ **BRAKE DRUMS AND**
- ★ **FOUNDRY**

12-C, NEW PALLIPALAYAM ROAD,
KOMARAPALAYAM-638183.
(Via) ERODE S. Rly.